# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

# 2019

**කම්කරු හා වෘත්තීය සමිති සබඳතා අමාත්‍යාංශය**

**தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு**

Ministry of Labour and Trade Union Relations

(අමාත්‍ය මණ්ඩල සාමාජික නොවන/அமைச்சரவை அந்தஸ்தற்றது / Non Cabinet)

# தலைப்பு - 54

**தொகுப்பு**
திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

**வெளியீடு**
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு
(திறன்கள் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள்)

## பொருளடக்கம்


பக்கம்

**அத்தியாயம் ஒன்று : நிறுவனம்சார் விபரம் / நிறைவேற்றம் பற்றிய சுருக்கம்**

1.1 அறிமுகம் 3
1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள் 3
1.3 பிரதான தொழிற்பாடுகள் 3
1.4 நிறுவனக் கட்டமைப்பு 5
1.5 அமைச்சின் பிரிவுகள் 7
1.6 அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்கள் 7

**அத்தியாயம் இரண்டு : முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்**

2.1 அமைச்சின் முன்னேற்றம் 11
2.2 அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் முன்னேற்றம் 17
2.2.1 தொழில் திணைக்களம் 17
2.2.2 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் 35
2.2.3 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் 43
2.2.4 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் 46
2.2.5 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 48
2.2.6 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 50
2.2.7 சிரம வசனா நிதியம் 56

2.3 சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் 58

**அத்தியாயம் மூன்று : 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று 63
3.2 நிதி நிலைமைக் கூற்று 65
3.3 பண ஓட்டக் கூற்று 66
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 68
3.5 வருவாய் சேகரிப்பு செயலாற்றுகை 68
3.6 ஒதுக்கீட்டு பயன்பாடு மீதான செயலாற்றுகை 68
3.7 நி.ஒ.208 நியதிகளின்படி ஏனைய திணைக்களத்தின் / அமைச்சின் முகவராக இந்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மானியம். 69
3.8 நிதிசார் சொத்துக்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை 69

பக்கம்

**அத்தியாயம் நான்கு : செயலாற்றுகை குறிகாட்டிகள்**

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டி (செயற்றிட்டத்தின் அடிப்படையிலமைந்தது) 73

**அத்தியாயம் ஐந்து : நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயலாற்றுகை**

5.1 இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 77

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் சாதனைகளும் சவால்களும் 78

**அத்தியாயம் ஆறு : மனிதவள விபரம்**

6.1 பதவியணி முகாமைத்துவம் 81

6.2 நிறுவகத்தின் செயலாற்றுகை மீது மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மேலதிகத்தின் தாக்கம் 81

6.3 மனித வளங்கள் அபிவிருத்தி 81

**அத்தியாயம் ஏழு : இணக்க அறிக்கை** 85

# அட்டவணைகளின் பட்டியல்


| | | பக்கம் |
|---|---|---|
| 1.4.1 | பதவியணி முகாமைத்துவம் பற்றிய விபரம் | 6 |
| 2.1.1 | 2019.12.31 இலுள்ளவாறு சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் | 13 |
| 2.1.2 | 2019 ஆம் ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை | 15 |
| 2.1.3 | 2019 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை | 15 |
| 2.2.1.1 | நிறுவனம்சார் மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 18 |
| 2.2.1.2 | பணி பகிஷ்கரிப்பு பற்றி அறிக்கையிடப்பட்டுள்ள தரவு - 2019 | 20 |
| 2.2.1.3 | தொழில் உரிமைகள் பற்றிய தரப்படுத்தல் நடவடிக்கைகள்-2019 | 22 |
| 2.2.1.4 | வேலைத்தளங்களினால் கைக்கொள்ளப்பட்ட பரிசோதனை சுகாதார செய்முறைகளுக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் - 2019 | 22 |
| 2.2.1.5 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை செம்மைப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 23 |
| 2.2.1.6 | பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர் தொழில் தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் - 2019 | 24 |
| 2.2.1.7 | பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய விசேட நிகழ்ச்சித்திட்டம் -2019 | 25 |
| 2.2.1.8 | அனுகூலத்திற்கான விண்ணப்பங்களைப் பெற்று, தீர்மானக் கடிதங்களை மத்திய வங்கிக்கு அனுப்புதல் - 2019 | 27 |
| 2.2.1.9 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றம் - 2019 | 27 |
| 2.2.1.10 | அனைத்து மாவட்ட அலுவலகங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் தீர்க்கப்பட்ட வழக்குகளும் -2019 | 28 |
| 2.2.1.11 | வழக்குகளின் நீதிமன்றம்சார் செயலாற்றுகைகள் - 2019 | 28 |
| 2.2.1.12 | 2019 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம் | 30 |
| 2.2.1.13 | 2019 ஆம் ஆண்டில் மூலதன செலவீனத்தின் வகைப்பாடு | 30 |
| 2.2.1.14 | ஆற்றப்பட்ட தொழிற்பாடுகள் - 2019 | 30 |
| 2.2.1.15 | அலுவலர்களுக்காக திணைக்களத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட, பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 32 |
| 2.2.1.16 | வெளிவாரி நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட திணைக்கள அலுவலர்களுக்கான பயிற்சி ஏற்பாடுகளுக்கான ஒதுக்கீடு - 2019 | 32 |
| 2.2.1.17 | 2019.12.31 இல் இயலுமையை வளர்க்கும் செயற்பாடுகளுக்கான ஒட்டுமொத்த செலவினம் | 32 |
| 2.2.1.18 | திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக வழங்கப்பட்ட சேவைகள்-2019 | 33 |
| 2.2.2.1 | 2019 திசெம்பர் 31 வரை நிதி முன்னேற்றம் | 35 |
| 2.2.2.2 | ஒவ்வொரு பிரிவினதும் முன்னேற்றம் - 2019 | 40 |
| 2.2.2.3 | தொழில்வாய்ப்பை வழங்குவதில் முன்னேற்றம் - 2019 | 40 |
| 2.2.2.4 | தொழில் தருநர்களுடன் நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | 41 |
| 2.2.3.1 | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் -2019 | 44 |
| 2.2.4.1 | நீதிமன்ற விடயங்கள் பற்றிய முன்னேற்றம் - 2019 | 47 |
| 2.2.4.2 | நிதிசார் முன்னேற்றங்கள் | 47 |
| 2.2.5.1 | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - 2019 | 49 |
| 2.2.6.1 | ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றம் | 51 |
| 2.2.6.2 | உண்மையான தொகைக்கு எதிராக திட்டமிடப்பட்ட தொகைகள் | 51 |
| 2.2.6.3 | உதவுதொகைகளை மீளச் செலுத்துதல் | 52 |
| 2.2.6.4 | அனுகூலக் கொடுப்பனவுகள் | 52 |

பக்கம்

2.2.6.5 2019 திசெம்பர் 31 இலுள்ளவாறான முதலீட்டு விடயவிதானம் 53

2.2.6.6 2019 ஓகஸ்ட் 31இல் உள்ளவாறான முக்கிய நிதித் தரவுகள் 54

2.2.6.7 முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள் - 2019 54

2.2.7.1 நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் 56

3.6.1 ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தும் செயற்பாடு 68

3.8.1 நிதிச் சொத்துக்கள் அல்லாதவை 69

4.1.1 அமைச்சின் செயலாற்றுகை குறிகாட்டிகள் 73

5.1.1 அமைச்சுடன் தொடர்புபட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள் 78

6.1.1 ஒட்டுமொத்த பதவியினர் 81

6.3.1 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியமை - 2019 82

6.3.2 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியமை – 2019 83

6.3.3 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியமை (இணைக்கப்பட்ட நிறுவனங்களின் அலுவலர்கள்) 83

7.1 இணக்க அறிக்கை 87

## வரைபுகளும் விளக்கப்படங்களும்

### வரைபுகள்

2.2.1.1 – வேலைத்தள (தொழில்) பரிசோதனை - 2019 19

2.2.1.2 – நியதிச்சட்டங்களை மீறியதாக பெறப்பட்ட முறைப்பாடுகளும் வழங்கப்பட்ட தீர்வுகளும் - 2019 20

2.2.1.3 – கைத்தொழில் பிணக்குகள் பற்றி பெறப்பட்ட முறைப்பாடுகளும் வழங்கப்பட்ட தீர்வுகளும் - 2019 20

2.2.1.4 – கூட்டு ஒப்பந்தங்களைப் பதிவு செய்தல் - 2019 21

### விளக்கப்படங்கள்

1.4.1 நிறுவகக் கட்டமைப்பு 5

2.2.2.1 தொழில்வாய்ப்பு உருவாக்கம், மேம்பாடு மற்றும் தொழில் வழிகாட்டல் 36

2.2.2.2 தொழில் நிலையத்தின் செயல்முறை 37

# புகைப்படங்கள்

பக்கம்


| | | |
|---|---|---|
| 2.1.1 | தேசிய கருத்தரங்கு அதிதிகளுடன் ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்த ஆய்வாளர்கள் | 11 |
| 2.1.2 | நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களில் உழைக்கும் சமூகத்திற்கு சேவை வழங்குதல் | 12 |
| 2.1.3 | சர்வதேச தொழில் தாபனத்தின் நூற்றாண்டு விழா நிகழ்வில் முதலாவது நாள் தபாலுறையும், ஞாபகார்த்த முத்திரையும் வழங்குதல் | 14 |
| 2.2.1.1 | சமூகக் கலந்துரையாடல் பிரிவினால் நடத்தப்பட்ட நிறுவனம்சார் மட்டத்திலான தொழில்தருநர் - பணியாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 18 |
| 2.2.1.2 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு - 2019 | 24 |
| 2.2.1.3 | 2019 ஓகஸ்ட் 20 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களால் ''மெஹேவர பியஸ'' கட்டடம் அங்குரார்ப்பணம் செய்யப்படுதல் | 29 |
| 2.2.1.4 | திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 32 |
| 2.2.2.1 | கேகாலை மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம் | 37 |
| 2.2.2.2 | ''லக் றக்கியா ஹறசற'' விருது வழங்கல் வைபவம் | 41 |
| 2.2.3.1 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சிறப்பு விருது வழங்கல் வைபவம் | 45 |
| 2.2.4.1 | தொழில்சார் ஊறுகளுக்கு நட்டஈடு வழங்குதல் | 47 |
| 2.2.5.1 | சான்றிதழ்கள் வழங்குதல் | 49 |
| 2.2.6.1 | தேசிய உற்பத்தித்திறன் விருது வைபவத்தில் வவுனியா பிராந்திய அலுவலகம் சேவைத்துறையின் கீழ் 3 ஆம் இடத்தைப் பெற்றமை | 53 |
| 2.2.6.2 | இலங்கை பொது நிதிக் கணக்குகள் மன்றத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட சிறந்த ஆண்டறிக்கை விருதுப் போட்டி - 2019 இல் இரண்டு தங்க விருதுகளைப் பெற்ற நிகழ்வு | 54 |
| 2.2.7.1 | மீகஹ கிவுல பிரதேசத்தில் நடத்தப்பட்ட கண் பரிசோதனை | 57 |

# அத்தியாயம் ஒன்று

## நிறுவனம்சார் விபரம் / நிறைவேற்றம் பற்றிய சுருக்கம்

# தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

## 1.1 அறிமுகம்

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் பிரதான குறிக்கோள்கள், இலங்கையின் பகுதியளவிலான அரசாங்க மற்றும் தனியார் துறை பணியாளர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சேவை நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் உற்பத்தியையும், தொழில் ஆக்கத்திறனையும் அதிகரிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற தொழிற்றுறை அமைதி மற்றும் தொழில்தருநர் மற்றும் பணியாளர்களிடையிலான உறவுமுறையைத் தாபிக்கின்ற கொள்கைகளை வகுத்தமைத்தல் மற்றும் அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் என்பவையாகும். இந்த அமைச்சிற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் பரப்பானது, உழைக்கும் மக்களின் நலன்புரிக்காக காலத்திற்குக் காலம் வகுத்தமைக்கப்படுகின்ற தொழில் சட்டங்கள் மற்றும் சட்டவாக்கங்களுடன் பரந்துபட்டுக் காணப்படுகின்றது. இதன்படி, அமைச்சின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி பின்வருமாறமைகின்றது.

## 1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

### தொலைநோக்கு

திருப்திமிகு உற்பத்திசார் தொழிலணி

### செயற்பணி

தொழிற்றுறை அமைதி, சமூகப் பாதுகாப்பு,வேலையாட்களின் உரிமைகள் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்துவதனூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்பு

**அமைச்சின் குறிக்கோள்கள்**

- ❖ முத்தரப்பினை வலுப்படுத்துவதனூடாக தொழில்தருநர்கள், பணியாளர்களுக்கிடையிலான உறவினைப் பலப்படுத்துதல்.
- ❖ சர்வதேச நியமங்களுடன் இணைங்குகின்ற சேவை நியமங்கள் மற்றும் வேலையாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துதல்.
- ❖ சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.
- ❖ பணிக்கமர்த்தப்பட்ட பெண் பணியாளர்களை வலுப்படுத்துதலும் பாதுகாத்தலும் மற்றும் பால்நிலை சமத்துவத்தை ஊக்குவித்தல்.
- ❖ தொழில் சட்டவாக்கங்கள் மற்றும் நடவடிக்கைமுறைகளின் நெகிழ்வுப் போக்கினை அதிகரித்தல்.
- ❖ சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான உரிய முறையியலை வகுத்தமைத்தல்.

அமைச்சின் அதிகாரத்தின் கீழ்வருகின்ற அனைத்து நிறுவனங்களும் பின்வருகின்ற பிரதான விடயப்பரப்புகளுக்கு முக்கியத்துவமளிக்கின்றன.

1. தொழிற்றுறை அமைதி மற்றும் ஐக்கியம்.
2. தொழில் நியமங்களையும்,ஒழுங்குகளையும் மற்றும் ஒழுங்குவிதிகளையும் வலுப்படுத்துதல்.
3. பெண் வேலையாட்களைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.
4. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.
5. சமூகப் பாதுகாப்பு.
6. தொழில் துறை தொடர்பாக கற்பித்தல்,பயிற்சியளித்தல்,ஆராய்ச்சி செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

## 1.3 பிரதான தொழிற்பாடுகள்

2019.01.16 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2016/10 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிக்கமைவாக, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள், கடமைகள் மற்றும் செயற்பணிகள் பின்வருமாறு:

1. தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் விடயங்களுக்கு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள், நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் பொதுக் கூட்டுத்தாபனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அந்த விடயங்கள் தொடர்பிலான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல், நடைமுறைப்படுத்தல் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. சர்வதேச தொழில் நியமங்கள், பணியாளர்களின் நிருவாகம் மற்றும் நலன்புரி தொடர்பான கொள்கைகளைத் தயார்செய்வதும் நடைமுறைப்படுத்துவதும்.

3. சர்வதேச தொழில் தாபனம் மற்றும் சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்புகளுடன் இணைதல்.

4. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வூதிய திட்டங்களை நிருவகித்தல்.

5. தொழிற்றுறை உறவுகள் மற்றும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்.

6. தொழில் உறவுகள் தொடர்பான சட்டங்களையும், ஒழுங்குவிதிகளையும் வகுத்தமைத்தல் மற்றும் அவற்றை ஒழுங்கமைத்தல் தொடர்பான விடயங்கள்.

7. வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டல்களை வழங்குதல்.

8. தொழில் சங்கங்களை பதிவுசெய்தல் மற்றும் அரச, தனியார் துறைகளில் உள்ள சகல தொழில் சங்கங்களினதும் நடவடிக்கைகளை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்திக்கொள்ளத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகம் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

9. தேசிய மனித வலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.

10. தொழில்வாய்ப்பளிக்கும் முகவர்களினால் கட்டணம் அறவிடப்படுவதை ஒழுங்குபடுத்துதல்.

11. தொழிலற்றோருக்கான அனுகூலக் காப்புறுதி திட்டம்.

12. தொழில்சார் வழிகாட்டலுக்கான ஏற்பாடு.

13. தொழில் திணைக்களம், தேசிய தொழில் கற்கை நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், சிரம வாசனா நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகளும் கண்காணிப்பும்.

## நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரதான சட்டவாக்கங்கள்

1. 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டம்.
2. 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற்சங்க கட்டளைச் சட்டம்
3. 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேற்று நலன்கள் கட்டளைச் சட்டம்
4. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்
5. 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்
6. 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்
7. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் (சேவை, வேதனங்களை ஒழுங்கமைத்தல்) சட்டம்
8. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள்,இளைஞர்கள் மற்றும் சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்தல் சட்டம்
9. 1956 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க கட்டணங்களை அறவிடும் தொழில் முகவர்கள் சட்டம்
10. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்
11. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர்களின் சேவையை முடிவுறுத்தும் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
12. 1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பணியாளர் சபைச் சட்டம்
13. 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சட்டம்
14. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டம்
15. 1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச (விசேட ஏற்பாடு) சட்டம்
16. 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டம்
17. 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் நிறுவகச் சட்டம்
18. 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டம்
19. 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வேலையாளர்களின் ஆகக்குறைந்த தேசிய சம்பளச் சட்டம்
20. 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம்.

## 1.4 நிறுவனத்தின் பதவிக் கட்டமைப்பு

### தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு




விளக்கப்படம் 1.4.1 நிறுவனத்தின் கட்டமைப்பு

1.4.1 **பதவியணி முகாமைத்துவம் பற்றிய விபரம்**

| இல. | புதவி | அனுமதிக் கப்பட்ட பதவியணி | ஆண்டி றுதியில் காணப் படுகின்ற எண்ணிக்கை | ஆண்டு காலப் பகுதியில் புதிய ஆட் சேர்ப்பு | அமைச் சுக்கு இட மாற்றம் செய்யப் பட்டவை | அமைச்சி லிருந்து இட மாற்றம் செய்யப் பட்டவை | ஏனை யவை | ஆண்டி றுதியில் வெற்றி டங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | 01 | 01 | - | 02 | 02 | - | - |
| 2 | மேலதிக செயலாளர் | 02 | 02 | - | 02 | 02 | - | - |
| 3 | பிரதம நிதி அலுவலர் | 01 | 01 | - | - | - | - | - |
| 4 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 02 | 02 | - | - | - | - | - |
| 5 | பிரதம கணக்காளர் | 01 | 01 | - | - | - | - | - |
| 6 | பிரதம அகக் கணக்காய்வாளர் | 01 | 01 | - | 01 | 01 | - | - |
| 7 | பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) | 01 | - | - | - | - | - | 01 |
| 8 | உதவிச் செயலாளர் | 03 | 01 | - | - | 01 | - | 02 |
| 9 | கணக்காளர் | 01 | 01 | - | - | - | - | - |
| 10 | உதவிப் பணிப்பாளர் (இ.நி.சே) | 01 | - | - | - | 01 | - | 01 |
| 11 | உதவிப் பணிப்பாளர் (இ.தி.சே) | 01 | 01 | - | - | - | - | - |
| 12 | சட்ட அலுவலர் | 01 | 01 | 01 | - | - | - | - |
| 13 | நிருவாக அலுவலர் | 01 | 01 | - | - | - | - | - |
| 14 | செயலாளரின் ஒருங்கிணைப்பு செயலாளர் | 01 | 01 | - | - | - | - | - |
| 15 | மொழிபெயர்ப்பாளர் | 02 | 01 | - | - | - | - | 01 |
| 16 | தகவல் தொழில்நுட்ப அலுவலர் | 01 | - | - | 01 | - | 01 | 01 |
| 17 | முகாமைத்துவ சேவை அலுவலர் | 29 | 22 | - | - | 01 | - | 07 |
| 18 | அபிவிருத்தி அலுவலர் | 37 | 17 | - | - | - | - | 20 |
| 19 | ஊடக அலுவலர் | 01 | 01 | - | - | - | - | - |
| 20 | சுருக்கெழுத்தாளர் | 01 | 01 | - | - | - | - | - |
| 21 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 | - | - | - | - | - |
| 22 | வீடியோ படப்பிடிப்பாளர் | 01 | 01 | - | - | - | - | - |
| 23 | படப்பிடிப்பாளர் | 01 | - | - | - | - | - | 01 |
| 24 | படப்பிடிப்பாளரின் உதவியாளர் | 01 | - | - | - | - | - | 01 |
| 25 | சாரதி | 19 | 14 | 6 | - | - | 01 | 05 |
| 26 | சுற்றுலா பங்களா காப்பாளர் | 01 | 01 | 01 | - | - | -- | - |
| 27 | அலுவலக உதவியாளர் | 13 | 13 | - | 02 | 02 | - | - |
| 28 | பங்களா உதவியாளர் | 01 | - | - | - | - | - | 01 |
| | | 127 | 86 | 08 | 08 | 10 | 01 | 41 |

பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த நிறுவனம் கவனஞ்செலுத்தியுள்ளது.

**1.5 அமைச்சின் கீழ் வருகின்ற பிரிவுகள்**

i. நிருவாகம் மற்றும் தாபனங்கள் பிரிவு
ii. திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
iii. தொழில் மற்றும் வெளிநாட்டு உறவுகள் பிரிவு
iv. நிதிப் பிரிவு

**1.6 அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்கள்**

i. தொழில் திணைக்களம்
ii. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்
iii. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்
iv. வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்
v. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்
vi. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
vii. சிரம வாசனா நிதியம்

# அத்தியாயம் இரண்டு

# முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

## 2.1 அமைச்சின் முன்னேற்றம்

### 2.1.1 நிருவாகம் மற்றும் தாபனங்கள் பிரிவு

நிருவாகம் மற்றும் தாபனங்கள் பிரிவானது நிருவாக அலகு, தாபன அலகு, மற்றும் ஊடக அலகு என்ற மூன்று அலகுகளைக் கொண்டிருக்கின்றது.

இந்தப் பிரிவிற்கு, பொது நிருவாகம், பெறுகைச் செயற்பாடுகள், முகாமைத்துவம், பராமரிப்புச் செயற்பாடுகள், பயிற்சியளித்தல், மற்றும் அமைச்சினையும், அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களையும் ஒருங்கிணைக்கின்ற செயற்பாடுகள் உள்ளடங்கலாக ஏனைய பல பொறுப்புக்கள் உரித்தளிக்கப்பட்டுள்ளன.

அமைச்சினதும், அமைச்சுசார் அலுவலகத்தினதும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகள் அனைத்தும் தாபனப் பிரிவினால் ஆற்றப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, இந்தப் பரிவு, பாராளுமன்ற வினாக்கள், பொது மேன் முறையீட்டுக் குழு, ஆலோசனைக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொது மக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பல்லின வேண்டுகோள்களையும் கையாள்கின்றது.

இந்த அமைச்சினால் மற்றும் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களால் ஆற்றப்படுகின்ற செயற்பாடுகளைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துதல் மற்றும் பல்வேறு ஊடக நிறுவனங்களினூடாக அவற்றினைப் பிரபல்யப்படுத்துகின்ற பொறுப்பிற்கு ஊடகப் பிரிவு பொறுப்புவாய்ந்ததாக விளங்குகின்றது.

### 2.1.2 திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான திட்டங்களை சரியான இலக்குகளை நோக்கித் தயாரித்தல், இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, முன்னேற்ற மீளாய்வு மற்றும் தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் இந்தப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாகும். இதற்கு மேலதிகமாக ஆய்வாண்டு காலப்பகுதியில் பின்வருகின்ற கடமைகள் இப்பிரிவினால் ஆற்றப்பட்டுள்ளன.

1. அமைச்சு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களால் ஆற்றப்படுகின்ற அபிவிருத்திப் பணிகளை உள்ளடக்கியிருக்கின்ற வருடாந்த செயற்றிட்டங்களைத் தயாரித்தல் மற்றும் இத்திட்டங்களை உரிய தரப்பினருக்குப் பணித்தல்.

    - வரவுசெலவுத்திட்ட அடிப்படையிலற்ற வருடாந்த செயற்றிட்டத்தைத் தயாரித்து, நடைமுறைப்படுத்தி அதனூடாக மாதாந்த முன்னேற்ற மீளாய்வுகளை நடத்துதல்.

2. 2015 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவு நியதிகளின்படி சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ, கண்காணிப்புத் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுகை அறிக்கைகளை மாதாந்தம் மற்றும் காலாண்டில் சமர்ப்பித்தல்.

3. அமைச்சின் செயலாற்றுகையை உள்ளடக்கி வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.

4. இலங்கை தொழில் செய்திமடலைப் பிரசுரிப்பது தொடர்பிலான அனைத்துச் செயற்பாடுகளையும் கையாளுதல்.

    ஆய்வாண்டு காலப்பகுதி தொடர்பில் தொடர் இல.70 இன் தொகுதி I, II & III ஆகியவை காலாண்டின் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

5. சர்வதேச தொழில் தாபனத்தின் நூற்றாண்டு நிறைவினைக் குறிக்குமுகமாக, தொழில் துறையில் புலமைக் கருத்தரங்கொன்று 2019 செப்ரெம்பர் 02 ஆம் நாள் அலங்கை ஆதார நிறுவகத்தில் நடைபெற்றிருந்தது. அதில் அறிக்கைகளின் பொழிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டு, இலங்கை தொழில் செய்திமடலின் விசேட பதிப்பொன்றும் விநியோகிக்கப்பட்டது.



படம் 2.1.1 தேசிய கருத்தரங்கு அதிதிகளுடன் ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்த ஆய்வாளர்கள்

## 6. நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள்

✓ இரண்டு நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள், பசறை மற்றும் லுனுகல பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கி பசறை மத்திய கல்லூரியில் 2019 யூலை 27 ஆம் திகதியும் மற்றும் பதுளை மாவட்டத்தின் தொழிலாளர் சமூகத்தின் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்காக வலிமடை மற்றும் ஊவா பறணகல பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கி வலிமடை மத்திய கல்லூரி 2019 யூலை 28 ஆம் திகதியும் நடத்தப்பட்டிருந்தன

✓ இரண்டு நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள், ஹபுதளை மற்றும் ஹல்தும்முல்லை பிரதேச செயலாளர் பிரிவு-களை உள்ளடக்கி ஹபுதளை தமிழ் மத்திய கல்லூரியில் செப்ரெம்பர் 07 ஆம் திகதியும், கந்தகெட்டிய, சொறோணாதோட்ட மற்றும் மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கி மீகஹகிவுல தேசிய பாடசாலையில் செப்ரெம்பர் 08 ஆம் திகதியும் நடத்தப்பட்டிருந்தன.

✓ நான்கு நடமாடும் சேவைகளில் 5000 இற்குமதிகமான வேலையாட்களுக்கு தொழில் துறை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. அதேபோன்று, ஒரு தொடர் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டிருந்தன.



படம் 2.1.2 நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களில் உழைக்கும் சமூகத்திற்கு சேவை வழங்குதல்

## 7. சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை அபிவிருத்திப் பாதையை அடைய வேண்டுமென்றால், சீரிய வேலை மேம்படுத்தப்படுதல் வேண்டும். சீரிய வேலையானது, சுதந்திரம், சமத்துவம், சமூகப் பாதுகாப்பு மற்றும் மனித கௌரவத்துடன்கூடிய சூழலொன்றில் ஆக்கத்திறனுள்ள வேலையைப் பெறுவதற்கு ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சமத்துவமான வாய்ப்புகளை பேணிவளர்க்கின்றது. சீரிய வேலையில் செல்வாக்கு செலுத்துகின்ற முக்கிய காரணி, வெறுமனே தொழில்களை உருவாக்குவது என்பதல்ல. அவ்வாறு உருவாக்கப்பட்ட தொழில்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதாகும். சீரிய வேலையானது நான்கு பிரதான கூறுகளை அடிப்படையாகக் கொண்டது.

- தொழிலை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் தேசிய உற்பத்தித்திறன்
- வேலையில் உரிமைகள்
- சமூகப் பாதுகாப்பு
- சமூகக் கலந்துரையாடல்

இந்த பிரதான 4 ஆக்கக்கூறுகளுக்கும் மேலதிகமாக, பின்வருகின்ற விடயப் பரப்புகளை உள்ளடக்கியும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. ஆக்கத்திறனை மேம்படுத்துதல்
2. பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துதல்

- ❖ சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக பின்வருகின்ற நிறுவனங்களுக்கு 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அமைச்சினால் நடத்தப்பட்ட நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையிடமிருந்து 100,000 ரூபா மேலதிக ஏற்பாடொன்று பெறப்பட்டுள்ளது.

| நிறுவனங்கள் | தேறிய ஏற்பாடு | செலவினங்கள் | எஞ்சியிருக்கின்ற ஏற்பாடு | செலவினம் வீதத்தில் |
|---|---|---|---|---|
| தொழில் திணைக்களம் | 6,731,000 | 6,167,557 | 563,443 | 91.62% |
| மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 4,371,000 | 3,302,000 | 1,069,000 | 75.54% |
| தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 1,000,000 | 1,000,000 | - | 100% |
| தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 2,998,000 | 2,997,158 | 842 | 99.97% |
| மொத்தம் | 15,100,000 | 13,466,715 | 1,633,285 | 89.18% |

அட்டவணை 2.1.1 2019.12.31 இலுள்ளவாறு சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்

## 2.1.3 தொழில் மற்றும் வெளிநாட்டு உறவுகள் பிரிவு

சர்வதேச தொழில் தாபனத்தின் உறுப்பு நாடாக இலங்கையால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கடப்பாடுகளுக்கமைவாக உள்நாட்டு தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, ஏனைய சமவாயங்கள் மற்றும் விதப்புரைகளை சர்வதேசரீதியில் அங்கீகரித்து தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் சார்பாக தொழில் துறையிலிருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இவற்றைப் பயன்படுத்துதல் இந்தப் பிரிவின் முதன்மையான கடமையாகும்.

தொழில் துறை தொடர்பிலான அதன் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை இலங்கை நிறைவேற்றியுள்ளது என்பதை சர்வதேச தொழில் தாபனத்திற்கும் ஏனைய பல தரப்பு முகவர்களுக்கும் உறுதிப்படுத்தி, தொழில் கொள்கைகளை வகுத்தமைத்தல், தேசிய மட்டத்திலான சமூகக் கலந்துரையாடல்களை உருவாக்குதல் மற்றும் மனித வளங்களின் அபிவிருத்திக்கான சர்வதேச ஆதரவினைப் பட்டியலிடுதல் இந்தப் பிரிவின் ஏனைய தொழிற்பாடுகளாகும்.

**2019 சனவரி 01 இலிருந்து 2019 திசெம்பர் 31 வரையான செயலாற்றுகைகள்**

- ❖ சர்வதேச தொழில் தாபனத்தின் 22 ஆம் இலக்க யாப்பின் கீழ் அனுப்பப்படுவதற்கான அறிக்கைகளைத் தயாரித்தல், 2019 ஆம் ஆண்டுக்கான 06 சமவாயங்களுக்கான அறிக்கைகளைத தயாரித்தல் மற்றும் 19 ஆம் இலக்க யாப்பின் கீழ் அனுப்பப்படுவதற்கான அறிக்கைகளைத் தயாரித்தல்.

- ❖ ஜெனிவாவில் வருடாந்தம் இடம்பெறுகின்ற சர்வதேச தொழில் மாநாட்டுக்கான பிரதிநிதிகளான முத்தரப்பின் பங்கேற்புடன் தொடர்புபட்ட அனைத்து ஒருங்கிணைப்பு மற்றும் பின்தொடர் செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல். முத்தரப்பு பிரதிநிதித்துவத்துடன் தேசிய தொழில் ஆலோசனை சபையின் நான்கு கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

- ❖ அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்கள் மற்றும் தொழில் திணைக்களத்தின் அலுவலர்கள் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களில், பயிற்சிப்பட்டறைகளில் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல். 2019 சனவரி 01 இலிருந்து 2019 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் 93 அலுவலர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றியுள்ளனர்.

- ❖ இலங்கை மத்திய வங்கியினால் வருடாந்தம் பிரசுரிக்கப்படுகின்ற பொருளாதார மீள்நோக்கு மற்றும் பொருளாதாரத் தோற்றத்திற்கு உரிய தகவல்களை வழங்குதல் மற்றும் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையுடன் தொடர்புபட்ட தகவல்களைத் தொகுத்தல்.

- ❖ தனியார் துறைப் பணியாளர்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் தற்போது செயற்பாட்டிலிருக்கின்ற சட்டவாக்கங்களில் முரண்பாட்டினை இல்லாது செய்யும் நோக்கிலும், நெகிழ்வுப் போக்கான சேவை நிபந்தனைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நாட்டின் தற்போதைய தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் புதிய சேவை நிபந்தனைகளை கூட்டிணைக்கும் நோக்கிலும் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அடித்தள வேலையை ஆரம்பித்தல்.

- இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையில் தொழில் துறை தொடர்பான சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்வித் துறைகளில் எதிர்காலத்தில் ஒப்பமிடவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பான செயற்பாடுகளைக் கையாளுதல்.

- வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களின் பயன்பாட்டிற்காக தொழில் துறையின் நடைமுறைப் போக்கு பற்றிய அறிக்கைகளைத் தொகுத்தல்.

- தொழில் துறையில் ஒத்துழைப்பினைப் பலப்படுத்துவதனைப் பொறுப்பேற்று வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

- சர்வதேச தொழில் தாபனத்தின் ஒத்துழைப்புடன் தொழில் துறையில் கூடுட்டுறவினைப் பலப்படுத்துவதற்கு பொறுப்பேற்கப்பட்டுள்ள வெளிநாட்டு சுற்றுலாக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்து தொழில்நுட்பத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் தொடர்பான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

- வலுக்கட்டாய தொழில் மீதான 29 ஆவது வரைவேட்டினை ஏற்று அங்கீகரிப்பதற்கு தேவையான ஒழுங்குகளை ஆக்குதல்.

- நியூயோர்க் மற்றும் நேபாளத்தில் நடைபெற்ற சிறுவர் தொழிலை நிரந்தரமாக இல்லாதொழித்தல் பற்றிய உலக மாநாடு III & IV இல் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அமைச்சின் அலுவலர்களை ஏற்பாடு செய்தமையும், சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கு வழியைக் கண்டறிந்த நாடு என்ற பெயரைக் இலங்கை கொண்டிருப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதலும்.

- தொழில்வாய்ப்பு வரைவு பற்றி கலந்துரையாடுவதற்கு தொழில் திணைக்களம் நியமித்துள்ள சிரேஷ்ட அலுவலர்களை கொண்டிருக்கின்ற குழுக் கூட்டத்தை நடத்துதல். உரிய ஆலோசகர்களின் பங்கேற்புடன் வரைவின் ஒவ்வொரு பிரிவும் விரிவாக கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

- அமைச்சு தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து வகையான கொள்கைகளையும் வகுத்தமைப்பதற்கான ஆரம்ப முயற்சியை எடுத்தல்.

- இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தலை இலக்காகக்கொண்டு தேசிய மனித உரி மைகள் செயற்றிட்டத்தின் (2017-2021) முன்னேற்றம் பற்றிய அறிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டத்தின் “தொழில் உரிமைகள்” பற்றிய அத்தியாயம் தொடர்பான குறிக்கோள்களை அடைவதற்கும் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவைப்பட்ட அத்தியவசியமான திட்டங்களை வகுத்தல்.

- சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட செயலணியின் 03 கூட்டங்களை நடத்தியமை

- அரசாங்கத்தால் பெறப்பட்ட பெருந்தோட்ட கம்பனிகளின் வேலையாளர்களுக்கு கிடைக்கவேண்டிய நிலுவையிலுள்ள ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு பற்றி தொழில் திணைக்களம், மத்திய வங்கி மற்றும் தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற்சங்க உறுப்பினர்களுடன் காலாண்டு மீளாய்வுக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியமை.

- தொழில் அமைச்சு, தொழில் திணைக்களம் மற்றும் சர்வதேச தொழில் தாபனத்தின் ஒத்துழைப்புடன் சர்வதேச தொழில் தாபனத்தின் நூற்றாண்டு விழா வைபவத்தினை ஒருங்கிணைத்தமை.




படம் 2.1.3 சர்வதேச தொழில் தாபனத்தின் நூற்றாண்டு விழா நிகழ்வில் முதலாவது நாள் தபாலுறையும், ஞாபகார்த்த முத்திரையும் வழங்குதல்

### 2.1.4 நிதிப் பிரிவு

**2019 ஆம் ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை**

| வகை | மதிப்பீடு | உண்மையானது | பற்றாக்குறை / மேலதிகம் | வேறுபாடுகளுக்கான பிரதான காரணங்கள் |
|---|---|---|---|---|
| மீண்டெழுவது | 242,000,000 | 207,949,838 | 34,050,162 | குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை |
| மூலதனம் | 135,250,000 | 111,078,800 | 24,171,200 | குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை |

அட்டவணை 2.1.2 2019 ஆம் ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை

| | நிருவனம் | செலவின தலைப்பு | செலவின வகைப்பாடு | தேறிய ஏற்பாடுகள் (ரூ. 000) | செலவினம் (ரூ. 000) | நிலுவை ஏற்பாடுகள் (ரூ. 000) | செலவின விகிதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அமைச்சு அலுவலகம் | 54 | மீண்டெழுவது | 184,820 | 158,038 | 26,782 | 85.5 |
| | | | மூலதனம் | 125,630 | 96,385 | 29,245 | 76.7 |
| 2 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | | மீண்டெழுவது | 12,000 | 10,769 | 1,231 | 89.7 |
| | | | மூலதனம் | 1,600 | 473 | 1,127 | 29.6 |
| 3 | தேசிய தொழில் | | மீண்டெழுவது | 6,000 | 5,240 | 760 | 87.3 |
| | | | மூலதனம் | 7,500 | 4,185 | 3,315 | 55.8 |
| 4 | வேலையாளர் நட்டஈட்டு ஆணை யாளர் அலுவலகம் | | மீண்டெழுவது | 39,180 | 32,929 | 6,251 | 84.0 |
| | | | மூலதனம் | 520 | 373 | 147 | 71.7 |
| | மொத்தத் தொகை | | மீண்டெழுவது | **242,000** | **206,976** | **35,024** | **85.5** |
| | | | மூலதனம் | **135,250** | **101,416** | **33,834** | **75.0** |
| 5 | தொழில் திணைக்களம் | 221 | மீண்டெழுவது | 2,203,010 | 1,801,245 | 401,765 | 81.7 |
| | | | மூலதனம் | 1,328,010 | 1,307,883 | 20,127 | 98.4 |
| 6 | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 328 | மீண்டெழுவது | 387,000 | 370,488 | 16,512 | 95.73 |
| | | | மூலதனம் | 27,775 | 23,877 | 3,898 | 85.97 |
| | மொத்தம் | | மீண்டெழுவது | **3,231,930** | **2,749,828** | **482,102** | **85.08** |
| | | | மூலதனம் | **1,531,975** | **1,467,397** | **64,578** | **95.78** |
| | மொத்தத் தொகை | | மீண்டெழுவது | **3,473,930** | **2,956,804** | **517,126** | **85.11** |
| | | | மூலதனம் | **1,667,225** | **1,568,813** | **98,412** | **94.09** |

அட்டவணை 2.1.3. 2019 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

2.1.5 விபரமான அறிக்கை மூன்றாம் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது.

**அகக் கணக்காய்வுப் பிரிவு**

இந்தப் பிரிவின் பிரதான தொழிற்பாடு, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சிற்கும் அதன் அதிகாரத்தின் கீழ் வருகின்ற தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலாகம் போன்றவற்றுக்கு அவர்களது குறிக்கோள்களை அடைவதற்கு அகக் கட்டுப்பாடுகளை அவர்கள் மேற்கொள்வதற்கு வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்குவதும், அத்தகைய நிறுவனங்கள், தாபனங்கள் விதிக்கோவை, நிதி ஒழுங்குவிதிகள், பெறுகை வழிகாட்டல்கள் மற்றும் அரசாங்கத்தால் விநியோகிக்கப்படுகின்ற அனைத்து சுற்றறிக்கைகளுடனும் இணங்குவதற்கு வழிகாட்டுவதாகும்.

**பிரிவின் தொழிற்பாடுகள்**

1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்ட நியதிகளின்படி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துதல்.

2. நிறுவனம்சார் முன்னேற்றங்களை ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒருமுறை மீளாய்தல், நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளை கலந்துரையாடுதலும் தீர்த்தலும்.

3. பாராளுமன்றத்தின் மதிப்பீட்டிற்கமைவான விடயங்களுக்கு முக்கிய அவதானம் செலுத்தி பொதுக் கணக்குகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல்.

4. அட்டவணைப்படுத்தப்பட்ட காலக் கட்டமைப்பிற்குள் வருடாந்தம் அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

## 2.2 அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் முன்னேற்றம்

## 2.2.1 தொழில் திணைக்களம்

தொழில் திணைக்களமானது, தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளிலுள்ள வேலையாட்களின் தொழில்சார் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் சமூகப் பாதுகாப்பினை நிறுவுவதற்குமான அரச துறை நிறுவனமாகும். இது, மத்திய அரசாங்கத்தின் எல்லைக்குள் வருகின்ற விடயமொன்றாகையால், இத்திணைக்களம் தேவையான சட்டவாக்கங்களை வலுப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்குமாக தொழில் அலுவலகங்களின் வலையமைப்பொன்றை நாடளாவியரீதியில் பேணிவருகின்றது.

தொழில் திணைக்களமானது, 1923 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இந்திய குடிவரவுக் கட்டளைச் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக, பெருந்தோட்டத்துறையில் தொழில் புரிவதற்காக பிரித்தானியரால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட இந்திய குடிபெயர் தொழிலாளிகளுக்கான நலன்புரியினை வழங்கும் குறிக்கோளுடன் ஆரம்பத்தில் தோற்று விக்கப்பட்டிருந்தது.

### தொலை நோக்கு

சர்வதேசரீதியில் போட்டிப் பொருளாதாரத்திற்காக தொழிற்றுறை அமைதியைத் தாபித்துள்ள நாடொன்று.

### செயற்பணி

தொழிற்றுறை அமைதியை உறுதிப்படுத்துகின்ற சீரிய வேலைச் சூழலொன்றைத் தாபிப்பதனூடாக இலங்கையின் அபிவிருத்தி செயல்முறையினை நோக்கிப் பங்களிப்புச் செய்தல்.

### குறிக்கோள்கள்

- பகுதியளவிலான அரச துறை மற்றும் தனியார் துறை வேலைத்தலங்களில் நிலையான தொழிற்றுறை அமைதியை நிறுவுதல்.
- சீரிய வேலைச் சூழலை உருவாக்கி, தொழில் நியமங்களை வகுத்தமைத்து வேலையாட்களின் வேலை நிபந்தனைகளை செம்மைப்படுத்துதல்.
- வேலையாட்களின் சமூகப் பாதுகாப்பைப் பாதுகாத்தல்.
- பெண்கள் மற்றும் இளைஞர்களின் தொழில் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துதல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லா தொழித்தல்.
- வேலையாட்களின் சுகாதாரத்திற்கு உகந்த மற்றும் விபத்துகள் அற்ற வேலைச் சூழலொன்றை உருவாக்குதல்

### தொழிற்பாடுகள்

- தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களிடையே கலந்துரையாடலை மேம்படுத்துதல்.
- தொழில் சட்டவாக்கங்களை வலுப்படுத்துதல் மற்றும் சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துவதனூடாக தொழிற்றுறைப் பிணக்குகளைத் தடுத்தலும், எழுந்துள்ள பிணக்குகளைத் தீர்த்தலும்.
- நிறுவனம்சார் பரிசோதனைகளை (தொழில் பரிசோதனைகள்) நடத்துதல் மற்றும் திணைக்களத்தின் அலுவலர்களால் தேவைப்படுத்தப்பட்ட அறிவினை கிரமமாக நாளதுவரைப்படுத்துவதன் மூலம் வேலையாட்களின் நியதிச்சட்ட உரிமை-களை நிலைநிறுத்துதல்.
- தொழில்தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் தொழில் சட்டங்கள் பற்றிய அறிவினையும், புரிதலையும் அதிகரிப்பதன் மூலம் தொழிற்றுறை அமைதியைத் தாபித்தல்.
- சர்வதேச தொழில் நியமங்களுடன் இணைந்து தேசிய பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களுடன் ஒத்ததாக தொழில் சட்டங்களை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்.
- ஊ.சே.நிதியத்தின் சிறந்த நிருவாகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதியங்களின் நிருவாகத்தினூடாக வேலையாட்களுக்கு அனுகூலங்கள் மற்றும் ஓய்வூதிய படிகள் உரிய வகையில் வழங்கப்படுகின்றன என்பதை நிச்சியப்படுத்திக்கொள்ளுதல்.
- பெண்கள், இளைஞர் மற்றும் சிறுவர் தொழிலுக்கு ஏற்புடையதான சட்டங்கள் உள்ளடங்கலாக அனைத்து தொழில் சட்டங்களையும் முறையாக நடைமுறைப்படுத்துதல்.

- சுகாதாரமான, விபத்துக்களற்ற வேலைத்தலங்கள் பற்றிய விழிப்புணர்வினை வேலையாட்களுக்கிடையில் உருவாக்குதல் மற்றும் வேலைத்தலங்களில் விபத்துக்கள் ஏற்படாது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுதல் மற்றும் சிறந்த சுகாதார செயல்முறைகளைப் பேணுதல்.
- மேலுள்ள தொழிற்பாடுகள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவைப்பட்ட புள்ளிவிபரங்களை சேகரித்தலும் பகுத்தாராய்தலும்.
- இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயங்களுக்கு சட்ட வலு அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சிறுவர் தொழிலையும், தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழிலையும் இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

### 2.2.1.1 பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு தொழிற்றுறை அமைதியை மேம்படுத்துதல்

திணைக்களத்தின் அடிப்படையானதும், முக்கியமானதுமான தொழிற்பாடான தொழிற்றுறை அமைதியைப் பேணும் நோக்கில், திணைக்களமானது தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கிடையில் கலந்துரையாடலைப் பேணுதல், வேலைத்தலங்களின் பரிசோதனை (தொழில்), நியதிச்சட்ட உரிமைகளின் மறுப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் வேலையாட்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை உருவாக்குதல் போன்ற 04 முக்கிய தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது

#### I. தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகிய இரண்டு தரப்புக்களுக்கிடையில் கரந்துரையாடலை பேணுதல்

நாடளாவியரீதியில் பரந்து காணப்படுகின்ற பகுதியளவிலான அரச துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஆக்கத்திறனையும் வினைத்தினையும் ஊக்குவிப்பதற்காக தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கிடையில் தொழிற்றுறை அமைதியை பலப்படுத்தக்கூடிய உகந்த சூழலை உருவாக்குவதற்காக பின்வருகின்ற பணி இலக்குகள் 2019 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்டிருந்தன.

- சாதகமான வேலைச்சுழலை உருவாக்குவதனை இலக்காகக்கொண்ட பகுதியளவிலான அரச துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்தினுடாக தொழில் சட்டங்கள் பற்றி தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்கள் இருவருக்கும் கற்பிப்பதற்காக முகாமையாளர்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டிருந்தன.



படம் 2.2.1.1 சமூகக் கலந்துரையாடல் பிரிவினால் நடத்தப்பட்ட நிறுவனம்சார் மட்டத்திலான தொழில்தருநர் - பணியாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

| தொ.இ. | நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சமூகக் கலந்துரையாடல் பிரிவினால் நடத்தப்பட்ட தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கான நிறுவன மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 66 |
| 02 | சமூகக் கலந்துரையாடல் பிரிவினால் முகாமையாளர்கள் மற்றும் தொழில் தருநர்களுக்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் | 10 |
| 03 | சமூகக் கலந்துரையாடல் பிரிவினால் அரச துறை நிறுவனங்களுக்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் | 13 |
| 04 | தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்காக மாவட்ட அலுவலகங்களினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 37 |
| 05 | தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்காக உப அலுவலகங்களினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 13 |

அட்டவணை 2.2.1.1 நிறுவனம்சார் மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

- முத்தரப்பு உறவுகளை உருவாக்குவதற்கும் கொள்கைகளை உருவாக்குவதற்கும் தேவையான தகவல்களை ஒன்றுசேர்ப்பதற்கு தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் உதவித் தொழில்தருநர்களின் பங்கேற்புடன் 19 பிராந்திய ஆலோசனை கூட்டங்களை நடத்தியமை.

- தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கிடையில் தொழில் சட்டங்கள் தொடர்பான அறிவினைப் பகிர்தல் மற்றும் பிரச்சினைக்குரிய விடயங்களைத் தீர்ப்பதற்காக 11 பிராந்திய கலந்துரையாடல்களை நடத்தியமை.

- சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தல கூட்டுறவு பற்றிய போட்டியொன்று, நிறுவனங்களுக்கிடையில் சமூகக் கலந்துரையாடல் தாபிக்கப்பட்டுள்ள அளவினை மதிப்பிடுவதற்காக உற்பத்தி, சேவை, ஆடை மற்றும் பெருந்தோட்ட துறைகளிலிருந்தான பிரதிநிதித்துவத்துடன் சிறிய, நடுத்தர மற்றும் பெரியளவில் நாடளாவிய ரீதியில் வருடாந்தம் நடத்தப்படுகின்றது. போட்டிக்கான ஆரம்ப ஒழுங்குகள் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், விருது வழங்கும் வைபவம் 2020 சனவரி மாதத்தில் நடத்தப்படவுள்ளது.

### II. வேலைத்தல (தொழில்) பரிசோதனைகள்

வேலைத்தல பரிசோதனைகளை நடத்துவதன் மிகமுக்கியமான குறிக்கோள், வேலைத்தலத்தில் வேலையாட்களின் நியதிச்சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கி ஒழுகப்படுகின்றதா என்பதைப் பரிசோதிப்பதும், துயரங்களைத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதும் மற்றும் தொழில்தருநர்களுக்கும் பணியாளர்களுக்குமிடையிலான நெருங்கிய உறவினைத் தாபிப்பதற்கான வழியை அமைத்துக்கொடுப்பதுவுமாகும். இத்தொழிற்பாட்டை ஆற்றுவதற்கு நாடளாவியரீதியில் மேவி 11 பிராந்திய தொழில் அலுவலகங்கள், 40 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 17 உப அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன், பணியிலீடுபடுத்தப்பட்டுள்ள தொழில் அலுவலகங்களின் எண்ணிக்கை 493 ஆகும். பெறப்பட்டுள்ள தகவல்களின்படி, 2019 ஆம் ஆண்டில் தொழில் அலுவலகங்களினால் ஆற்றப்பட்ட தொழில் பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 76,108 ஆகவிருந்தது.




வரைபு - 2.2.1.1 வேலைத்தல (தொழில்) பரிசோதனை - 2019

**குறிப்பு** - *இதுவரை பெறப்பட்ட தரவின்படி வரைபு தயாரிக்கப்பட்டுள்ளமையால் இந்த தரவு வேறுபடக்கூடும்.*

### III நியதிச்சட்ட உரித்துக்களை மறுப்பது மீதான முறைப்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் தொழிற்றுறைப் பிணக்குகளைத் தீர்த்தல்

நியதிச்சட்ட சட்டங்களை மீறியதன்பேரில், வேண்டுமென்றே தொழிற்றுறை அமைதியை மீறியதன் பேரில் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் பணியாளர்களாலும் ஏனைய பல்வேறு தரப்புகளாலும் தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களில் தாக்கல் செய்யப்படுகின்ற பணிப்பகிஷ்கரிப்புக்கான சாத்தியம் மற்றும் அத்தகைய முறைப்பாடுகளை தீர்ப்பதற்கு உரிய அலுவலர்களால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள். அவர்களது முயற்சி தோல்வியுற்றால், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கட்டளையின் பேரில் தீர்வுக்காக பிணக்கு நடுத்தீர்ப்பாளருக்கு அல்லது கைத்தொழில் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டில் நியதிச்சட்ட சட்டங்களை மீறியதன்பேரில் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் வழங்கப்பட்ட தீர்வுகள் பின்வருமாறு.




வரைபு 2.2.1.2 - நியதிச்சட்ட சட்டங்களை மீறியதன்பேரில் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் வழங்கப்பட்ட தீர்வுகள் - 2019
**குறிப்பு** - *தற்போது கிடைக்கப்பெறுகின்ற தரவின்படி வரைபு தயாரிக்கப்பட்டுள்ளமையால் மாற்றத்திற்குட்படக்கூடியது*

ஆய்வாண்டு காலப்பகுதியில் நியதிச்சட்ட சட்டங்களை மீறியதன்பேரில் பெறப்பட்ட முறைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தகளவு அதிகமாகவுள்ளதுடன், முறைப்பாடு பெறப்படுகின்ற போக்குடன் ஒப்பிடமிடத்து பிணக்குகளைத் தீர்க்கும் போக்கு பாரிய சரிவினைக் கொண்டிருப்பது முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நேரத்தை குறைப்பதற்கான திறனைக் குறிக்கின்றது.




வரைபு 2.2.1.3 கைத்தொழில் பிணக்குகளின்பேரில் பெறப்பட்ட முறைப்பாடுகளும் தீர்வுகளும் -2019
**குறிப்பு** - *தற்போது கிடைக்கப்பெறுகின்ற தரவின்படி வரைபு தயாரிக்கப்பட்டுள்ளமையால் மாற்றத்திற்குட்படக்கூடியது*

பணிப் பகிஷ்கரிப்பு செயற்பாட்டுக்கு இட்டுச் செல்வதற்கான வாய்ப்புள்ள நிலமை வருகின்றபோது, திணைக்களத்தின் அலுவலர்கள் நிலமையைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன், பணிப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றால், பிணக்கினைத் தீர்ப்பதற்கு தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 2019 ஆண்டில் அறிக்கையிடப்பட்ட பணிப் பகிஷ்கரிப்புகளின் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

| தொ.இ. | நிகழ்வு | பெருந் தோட்டங்கள் | நிருமாணம் | உற்பத்தி | சுரங்கம் | பகுதியள விலான அரசாங்க துறை | ஏனைய சேவைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | அறிக்கையிடப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு | 8 | 1 | 11 | - | - | 1 | 21 |
| 02 | பங்குபற்றிய பணியாளர்களின் எண்ணிக்கை | 1952 | 100 | 4701 | - | - | 16 | 6769 |
| 03 | இழக்கப்பட்ட உழைப்பு நாள் | 28218 | 200 | 26403 | - | - | 16 | 54837 |

அட்டவணை 2.2.1.2 – பணிப் பகிஷ்கரிப்பு பற்றி அறிக்கையிடப்பட்டுள்ள தரவு -2019

கைத்தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான வழிகளாக கூட்டு ஒப்பந்தங்களுக்குச் சென்றால், தொழில்தருநர் மற்றும் பணியாளர்கள் ஆகிய இருவருக்கும் அதிகளவு நிரந்தர தீர்வு வழங்கப்படுவதுடன், அவை, தொழில் சட்டவாக்கங்களினூடாக வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளிலும் பார்க்க அதிக சிறப்புரிமைகளை பணியாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளாக கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கையில் படிப்படியான வீழ்ச்சி காணப்படுவதனால், சமூகக் கலந்துரையடல் மூலம் கூட்டு ஒப்பந்தத்திற்குச் செல்வதனூடாக சிறந்த சூழலை உருவாக்குவதற்கு திணைக்களம் முயற்சிக்கின்றது.




வரைபு 2.2.1.4 – கூட்டு ஒப்பந்தங்களை பதிவு செய்தல் -2019

தொழில் அலுவலகங்களின் தலையீட்டால் மற்றும் தொழிற்றுறை தொடர்புகள் பிரிவின் நேரடி ஈடுபாட்டினால் தீர்க்கமுடியாத பிணக்குகள் கைத்தொழில் நீதிமன்றமொன்றின் நடுத்தீர்ப்புக்கு அனுப்பப்படுவதுடன், 2019 ஆம் ஆண்டில் 125 நடுத்தீர்ப்புக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் 56 இற்கு தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

தொழிற்றுறை அமைதி மீறப்படுகின்றபோது தனிப்பட்டரீதியில் அல்லாது கூட்டாக தொழில்தருநர் மற்றும் பணியாளர் இருவருக்கும் சமமான பிரதிநிதித்துவத்திற்கு வழிவகுத்து, இரண்டு தரப்புகளுக்கு சமமான, சமத்துவமான வழக்கு கேட்டலை வழங்கி தொழிற்சங்கங்களை உருவாக்குவதற்கும் திணைக்களத்தில் பதிவதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, 2019 ஆம் ஆண்டில் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 132 என்பதுடன், 2019.12.31 இலுள்ளவாறு தொழிற்படுகின்ற தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1903 ஆகும்.

### 2.2.1.2 பெண்களின் உரிமைகளை மேம்படுத்துதல்

தனியார் துறையினரால் பணிக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாட்களின் சேமநலன் மற்றும் தொழில் பாதுகாப்பினை நிச்சயப்படுத்திக்கொள்வதற்காக கொள்கைகளை, நியமங்களை மற்றும் வேலை நிபந்தனைகளை வகுத்தல், அவற்றுக்கு சட்டப் பயனளித்தல் மற்றும் அவற்றைக் கண்காணித்தல் போன்றவை திணைக்களத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற செயல்முறைகளாகும். இதன்படி, பின்வருகின்ற செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டிருந்தன.

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | அலுவலக காலம் நிறைவடைந்த 06 சம்பளச் சபைகளின் பிரதிநிதிகளை நியமித்தல். | 23 |
| 2 | ஐந்து நாள் வேலை வாரத்திற்கு அனுமதியளித்தல். | 203 |
| 3 | தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல். | 2 |
| 4 | கொக்கோ, கறுவா, மிளகு வளர்ப்பு மற்றும் பதப்படுத்துதல் கைத்தொழிலின் மாதாந்த வேதனங்களை வெளியிடுதல். | 12 |
| 5 | கூட்டு ஒப்பந்தங்களின் சட்டரீதியான செல்லுபடியாகும் தன்மையைப் பரிசோதித்தல். | 22 |
| 6 | 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் கீழ் சட்ட உரைபெயர்ப்பின் கீழ் தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ளுதல். | 45 |
| 7 | சம்பளச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் சட்ட உரைபெயர்ப்பின் கீழ் தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ளுதல். | 65 |
| 8 | கடைகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டத்தின் கீழ் சட்ட உரைபெயர்ப்பின் கீழ் தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ளுதல். | 46 |
| 9 | சம்பளச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் மற்றும் கடைகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டத்தின் கீழ் வேதன கழிப்பனவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களுக்கு அனுமதியளித்தல். | 44 |
| 10 | அத்தகைய நிதியங்களிலிருந்து செலவினத்தை குறைப்பதற்கு தண்டப்பண நிதியத்தைத் தாபிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களுக்கு அனுமதியளித்தல். | 5 |
| 11 | புத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களினுடாக சம்பளச் சபைகள் தொடர்பான விசேட விடுமுறைகள் மற்றும் தேர்தல் விடுமறைகளை அறிவித்தல். | 3 |
| 12 | திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு தரவேற்றம் செய்வதற்காக இப்பிரிவினால் வெளியிடப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான வர்த்தமானிகள், திருத்தங்களின் மென் பிரதிகளை அனுப்பியமை. | 17 |
| 13 | சம்பளச்சபைகளின் முடிபுகளை திருத்துவதும், வெளியிடுவதும். | 44 |

அட்டவணை 2.2.1.3 – தொழில் உரிமைச் செயற்பாடுகளை நியமப்படுத்துதல்.

### 2.2.1.3 சுகாதாரமான, தீங்கற்ற வேலைச் சூழலை நிச்சயப்படுத்துதல்

#### I. தொழில்சார் சுகாதாரத்தை நிச்சயப்படுத்துதல்

நடைமுறைப்படுத்தப்படுகின்ற தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, பணியாளர்களின் சுகாதாரம் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு தொழில்தருநரின் சட்டக் கடப்பாடு என்பதுடன், பாதுகாப்பான சூழலில் பணியாற்றுவதற்கான உரிமை வேலையாட்களின் அடிப்படை உரிமையாகும். இதற்காக 2019 ஆம் ஆண்டில் பின்வருகின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- **வேலைத்தலங்களின் தொழில்சார் சுகாதாரத்தைப் பரிசோதித்தல்**

| | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | சூழல்சார் அளவீடுகள் | 131 |
| 2 | பௌதீகவியல் பரிசோதனைகள் | 2495 |
| 3 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வு | 292 |
| 4 | விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | 240 |
| 5 | ஊ.சே.நி மற்றும் ஊ.ந.பொ.நி மருத்துவ சபைகள் | 24 |

அட்டவணை 2.2.1.4 வேலைத்தலங்களால் கைக்கொள்ளப்பட்ட தொழில் சுகாதார நடவடிக்கைகளை பரிசோதிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் - 2019

## II. விபத்துக்களற்ற வேலைச் சூழலை உறுதிப்படுத்துதல்

மின்சாரம், வெப்பம், காற்றமுக்கம், மிதமிஞ்சிய வெளிச்சம் அல்லது சத்தம் போன்றவை காரணமாக தொழிற்சாலைகளில் வேலையாட்களுக்கு ஏற்படுகின்ற உடற் காயங்கள் மற்றும் மரணங்களின அபாயம் மற்றும் அத்தகைய விபத்துக்களைக் குறைத்தல் திணைக்களத்தின் முதன்மையான பொறுப்புகளிலொன்றாகும்.

இந்த தொழிற்பாட்டை ஆற்றுவதற்காக நாடளாவியரீதில் தொழிற்சாலைகளை பரிசோதிப்பதற்காக 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியல் அலுவலகங்களுக்கு பொறியிலாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

புதிய தொழிற்சாலைகளை பதிவுசெய்வதன் கீழ் பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 31,346. ஆய்வாண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட புதிய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1,409.

- கட்டட வரைபடங்களை பரிசோதித்தலும் அனுமதித்தலும் – 147
- தொழிற்சாலைகளின் பரிசோதனை - 3944

**விபத்துக்கள் தீங்கிளைக்கின்ற சந்தர்ப்பங்கள் பற்றி விசாரித்தல்**

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மரணத்தை ஏற்படுத்திய 84 விபத்துக்களும் மரணத்தை ஏற்படுத்தாத 1,409 விபத்துக்களும் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளன. விபத்துக்களுக்கான காரணங்களை இனங்கண்டு, அத்தகைய மரணத்தை ஏற்படுத்திய அனைத்து விபத்துக்கள் பற்றிய விசாரணை தொடர்ந்து, அத்தகைய விபத்துக்கள் மீண்டும் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தை மீறிய காரணத்தால் விபத்துக்கள் எற்பட்டிருப்பின் அந்த நிறுவனங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**சட்ட நடவடிக்கை எடுத்தமை - 29**

**அபாயகரமான இயந்திரங்களை பரிசோதிப்பதனை ஒழுங்குபடுத்தியமை – 9832**

**விழிப்புணர்வு பயிற்சியமர்வுகளை நடத்தியமை**

| தொ.இ. | உரிய பிரிவு | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | நிருமாணம் | 41 | 3100 |
| 02 | ஆடை | 23 | 2500 |
| 03 | ஏனைய உற்பத்திகள் | 19 | 1800 |
| 04 | ஏனையவை | 13 | 2000 |
| 05 | மொத்தம் | 96 | 9400 |

அட்டவணை 2.2.1.5 - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு பயிற்சியமர்வுகள் - 2019

- **தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களை வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவகம் மற்றும் சிரம வாசன நிதியத்திடம் அனுப்புதல்**

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 349 விபத்துக்கள் வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளருக்கு அறிக்கையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களில் தங்கியிருப்போக்கும் நட்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திலுள்ள பாடசாலைக்குச் செல்கின்ற பிள்ளைகளின் விபரங்கள் அவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக சிரம வாசனா நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **உலக பாதுகாப்பு தினக் கொண்டாட்டம்**

250 பணியாளர்களின் பங்கேற்புடன், சீதவக்கவில் முதலீட்டுச்சபையின் கேட்போர் கூடத்தில் கௌரவ அமைச்சரின் தலைமையில் உலக பாதுகாப்பு தினத்தைக் குறிக்குமுகமாக தொழில் திணைக்களத்தால் 2019.05.30 ஆம் திகதி தேசிய கருத்தரங்கொன்று நடத்தப்பட்டிருந்தது.



படம் 2.2.1.2 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு - 2019

- **பெண்கள், இளைஞர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்**

பெண்களின் உழைப்பின் பங்களிப்பினை ஆக்கத்திறனுடன் மேம்படுத்துவதற்கு வேலைத்தலங்களில் பெண்களை பாதுகாக்கின்ற தொழில்சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அத்தகைய சட்டங்களை காலத்திற்கு காலம் மீளாய்வுசெய்து அவற்றுக்குத் தேவையான திருத்தங்களை பரிந்துரைத்தல் திணைக்களத்தின் பிரதான பொறுப்புகளிலொன்றாகும்.

இதேபோன்று, அனைத்து அக்கறைதாரர்களின் பங்கேற்புடன் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல், 18 வயதுக்கு கீழுள்ள சிறுவர்களுக்கு ஏற்புடையதான தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தற்போதிருக்கின்ற சமூ கப்பிரச்சினைகளும் இணங்கும் வகையில் தற்போதிருக்கின்ற சட்டங்களுக்கு திருத்தங்களை பரிந்துரைத்தல் போன்றவையும் இத்திணைக்களத்தின் பிரதான கடமைகளாகும்.

**I. பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்புடையதாக தற்போதிருக்கின்ற சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் - 2019 ஆம் ஆண்டில் முன்னேற்றம்**

| தொ.இ. | வகைப்பாடு | எண்ணிக்கை | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| 01 | சிறுவர் தொழில் பற்றிய விசாரணை தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழில் பற்றி விசேட குழும விசாரணை | 189 | 162 விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டு கோப்புகள் மூடப்பட்டுள்ளன. சிறுவர் தொழில் பற்றி வெளிப் படுத்தப்பட்டுள்ளமையால், அந்த முறைப்பாடுகளில் முறைப்பாடுகளில் 7 இற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 02 | பெண்களின் சேவை நிபந்தனைகள் பற்றி பெறப்பட்ட முறைப்பாடுகளை விசாரித்தல் | 35 | விசாரிக்கப்பட்ட 16 முறைப்பாடுகள் முடிவுறுத்தப் பட்டு கோப்புகள் மூடப்பட்டன. |
| 03 | பெண்களை இரவில் வேலைக்கமர்து வதற்கு அனுமதி வழங்குதல் | 962 | பெண்களை இரவில் வேலைக்கமர்த்துவதற்கு பெண்கள், சிறுவர்கள் பிரிவினால் 26 அனுமதியும், மாவட்ட அலுவலகங்களால் 909 அனுமதிகளும் மற்றும் உப அலுவலகங்களிலிருந்து 17 அனுமதியும் வழங்கப்பட்டுள்ளன. |
| 04 | தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழில் பற்றி விசேட குழும விசாரணை | 67 | 336 நிறுவனங்கள் பரிசோதிக்கப்படடிருந்தன, ஆனால் தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழில் பற்றி அறிக்கையிடப்படவில்லை |
| 05 | பெண் வேலையாளர்கள் பற்றிய விசேட குழும விசாரணை | 93 | 465 நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 77 இலிலிருந்து சேவை நிபந்தனையை மீறியமைக்கான முறைப்பாடுகள் அறிக்கையிடப் பட்டுள்ளன. |

அட்டவணை 2.2.1.6 - பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர் தொழில் தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

II. கல்விசார் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்

- உரிய பிரதான ஞாபகார்த்த நாட்களை நடத்துவதன் மூலம் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்

**(அ) சர்வதேச மகளீர் தினத்தைக் கொண்டாடுதல்**

2019 ஆம் ஆண்டின் சர்வதேச மகளீர் தினக் கொண்டாட்டம், கௌரவ அமைச்சரின் தலைமையின் கீழ் 10 ஆவது தளத்தில் தொழில் திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் 2019.03.08 ஆம் திகதி நடைபெற்றிருந்தது.

**(ஆ) சிறுவர் தொழிலுக்கு எதிரான நாள் (12.06.2018)**

இத்திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு, அவர்களது சிறந்த உடல் மற்றும் உளவிருத்திக்கு ஆபத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கின்ற சிறுவர் தொழிலையும், தீங்கிளைக்கின்ற தொழில்களையும் குறைத்து, சிறுவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கும் மற்றும் சுகாதாரத்தையும் கல்வியையும் மேம்படுத்துவதன் மூலம் நிலையான அபிவிருத்தி நிலையை தோற்றுவிக்கும் நோக்கத்துடன் நாடளாவியரீதியில் தீங்கிளைக்கின்ற தொழில் பற்றிய சோதனை நடத்தியிருந்ததுடன், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றையும் நடத்தியிருந்தது. சிறுவர் தொழில் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அதற்கிணையான நிகழ்ச்சித்திட்மொன்றும் ஊடகங்களினூடாக நடத்தப்பட்டது. இத்தொடர் சோதனைகள் 236 நிறுவனங்களை உள்ளடக்கியிருந்ததுடன், சிறுவர்கள் தீங்கிளைக்கின்ற தொழிலில் பணிக்கமர்த்தப்பட்டிருப்பதை இனங்காண முடியவில்லை.

**(இ) சர்வதேச சிறுவர் தினத்தை கொண்டாடுதல்**

சர்வதேச சிறுவர் தினம் - 2019 தொழில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவினால் 2019 ஒக்டோபர் 01 ஆம் திகதி மொறட்டுவ “பௌத்த மந்திரய” வில் கொண்டாடப்பட்டது.

I. இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான கருத்திட்டத்தின் கீழ் சிறுவர் தொழிலற்ற வலயத்தைத் தாபிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

   பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளை மையப்படுத்தி நிவிட்டிகல பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டிருந்ததுடன், உரிய அலுவலர்கள் நாடளாவியரீதியில் மாவட்ட, மாகாண அபிவிருத்தி குழுக்களில் பிரத்தியோகமாக சுருக்கமாகத் தெரிவித்திருந்தனர்.

II. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பாதுகாப்புக்காக கீழே சுட்டிக்காட்டப்பட்டவாறு ஏனைய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கு திணைக்களம் அதன் ஆதரவை வழங்கியிருந்தது.

   ❖ தயாப்பாலுட்டுவது பற்றிய தேசிய வாரத்துக்காக சுகாதார அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஊடகவியலாளர் கூட்டத்தில் மகப்பேற்று லீவுச் சட்டம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தியமை.

   ❖ ஆட் கடத்தலுக்கு எதிரான குழுவில் பங்குபற்றியமை.

   ❖ தேசிய போஷாக்கு செயற்றிட்டத்திற்கு செயலுறு பங்களிப்பினை வழங்கியமை.

III. **ஏனைய முக்கிய நிகழ்ச்சிகளின் விபரங்கள்**

| தொ. இ. | நிகழ்ச்சித்திட்டம் | நடத்தப்பட்டநிகழ்ச் சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தனியார் துறை பணியாளர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம். | 05 | 405 |
| 2 | சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது தொடர்பிலான சட்டங்களை வலுப்படுத்துவதில் பங்குபற்றுகின்ற ஆதரவளிக் கின்ற அலுவலர்களிடையே விழிப்புணர்வினை உருவாக்குதல் | 01 | 75 |
| 3 | பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்களுக்கான இயலுமையை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம். | 01 | 75 |
| 4 | பெருந்தோட்டத்துறையிலுள்ள பணியாளர்களுக்கான விழிப் புணர்வு நிகழ்ச்சித்திட்டம். | 03 | 106 |
| 5 | பெண்கள், இளைஞர் மற்றும் சிறுவர் தொழில் பற்றிய தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்து வதற்கான தொழில் அலுவலர்களுக்குரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | 07 | 348 |

அட்டவணை 2.2.1.7- பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் பற்றிய விசேட நிகழ்ச்சித்திட்டம் - 2019

**IV. தற்போதிருக்கின்ற சட்டக் கட்டமைப்பினைத் திருத்துவதற்கான செயல்முறை**

1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளைஞர் மற்றும் சிறுவர் தொழில் சட்டத்தின் 2006 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 20(அ) பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி எந்தத் தீங்கிளைக்கின்ற தொழிலிலும் பதினெட்டு வயதுக்குக் குறைந்த வயதுடைய ஆளொருவரை தொழிலுக்கமர்த்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளின் உடல் மற்றும் உள சுகாதாரத்திற்கு, பாதுகாப்புக்கு தீங்கிளைக்கக் கூடியதாக இனங்காணப்படுகின்ற தொழில்கள், தீங்கிளைக்க்கூடிய தொழில்களின் பட்டியல் 2018 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டிருந்ததுடன், ''தீங்கிளைக்கின்ற தொழில் ஒழுங்குவிதிகள்'' என்ற புதிய வரைவுக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்தது. சட்டவரைஞர் திணைக்களத்திற்கு வரைவினை சமர்ப்பித்து, அதன் அவதானிப்புகளை அனுப்புவதற்கு தொழில் திணைக்களமும் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறுவர் ஒருவரை பணிக்கமத்துவதற்கான ஆகக்குறைந்த வயதினை 14 இலிலிருந்து 16 வயதாக அதிகரிப்பதற்கான அமைச்சரவை அனுமதி நியதிகளின்படி, இத்திணைக்களத்தல் வலுப்படுத்தப்பட்டுள்ள 5 சட்டங்களின் வரைபுகள் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 2.2.1.5 வேலையாளுக்கான சமூகப் பாதுகாப்பு

ஊழியர் சேமலாப நிதியம், பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறைகளிலுள்ள நாட்டின் உழைக்கும் மக்களின் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கில் தாபிக்கப்பட்டு, தொழில் திணைக்களத்தால் நிருவகிக்கப்படுகின்றது. நிதியத்தின் ஒட்டுமொத்த பெறுமதி 2,514,515 மில்லியன் ரூபா என்பதுடன், நிதியத்தின் செயலுறும் மற்றும் செயலுறாத கணக்குகளின் எண்ணிக்கை 18.9 மில்லியன் ஆகும்.

- **ஊழியர் சேமலாப நிதியத்தில் வேலைத்தலங்களைப் பதிவு செய்தல்**

  அனைத்து பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களும் ஊழியர் சேமலாப சட்டத்தினால் நிதியத்தில் பதிவுசெய்துகொள்ளப்படுவதற்கு வேண்டப்படுகின்றன. இதன்படி, 2019 ஆம் ஆண்டில் பதிவுசெய்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 6218. ஆகும். 2019 ஆம் ஆண்டில் நிதியத்திற்கு உதவுதொகையாக வரவு வைத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 84,874 என்பதுடன், உதவுதொகையாக வரவு வைத்துள்ள தொகை 157,434 மில்லியன் ரூபாவாகும்.

- **ஊழியர் சேமலாப நிதியத்தில் உறுப்பினர்களைப் பதிவு செய்தல்**

  ஊ.சே.நி. சட்டத்தின் கீழ் அனைத்து பணியாளர்களையும் உள்ளடக்கி இலக்கங்களை ஒதுக்கியமை மற்றும் அவற்றை நிதியத்தில் பதிவுசெய்கின்றமை திணைக்களத்தின் ஆதரவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி, 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 532,107 என்பதுடன், தற்போது மத்திய வங்கியில் 2.52 மில்லியன் செயலறு கணக்குகள் உள்ளன.

  குறிப்பிட்டவாறு உதவுதொகைகளைச் செலுத்தாத பணியாளர்களுக்கு முதலாவது அறிவித்தல் மற்றும் சிவப்பு அறிவித்தல் வழங்கப்படுகின்றது. அத்தகைய அறிவித்தல்களுக்கு முறையாக பதிலளிக்காதுவிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், மேலதிக கட்டணத்துடன் அறவிடப்பட்டு, கணக்கில் வைக்கப்படும். 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 20,436 முதலாவது அறிவித்தல்களை வழங்கி 8,226 மில்லியன் ரூபா அறவிடப்பட்டதுடன், 13,756 சிவப்பு அறிவித்தல்களை வழங்கி 5,559 மில்லியன் ரூபா அறவிடப்பட்டிருந்தது.

- **ஊ.சே.நி அனுகூலக் கொடுப்பனவுகள்**

  திணைக்களத்தின் தலைமை அலுவகத்திலிருந்தும், நாடளாவியரீதியில் அமைந்துள்ள 35 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 12 உப தொழில் அலுலகங்களிலிருந்தும் இந்த சேவையைப் பெறுவதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டில் அனுகூலங்களைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அனுகூலமாக செலுத்தப்பட்டுள்ள மொத்தத் தொகை 126,042 மில்லியன் ரூபாவாகும்.

| | விடயம் | 2019 சனவரி முதல் திசெம்பர் வரை பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் | 2019 சனவரி முதல் திசெம்பர் வரை முடிபுக் கடிதங்கள் அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | ஓய்வூதிய வயதை அடைந்ததன் பேரில் ஓய்வூதிய அனுகூல கொடுப்பனவு | 92125 | 90216 |
| 02 | திருமணத்தின் பேரில் சேவையிலிருந்து விலகுகின்ற பெண் உறுப்பினர்களுக்காக அனுகூல கொடுப்பனவு. | 22333 | 21895 |
| 03 | முழுமையான அங்கவீனத்தால் சேவையிலிருந்து விலகுகின்றவர்களுக்கான அனுகூல கொடுப்பனவு. | 1316 | 1294 |
| 04 | மரணமடைந்த உறுப்பினர் அனுகூலங்கள். | 5621 | 4978 |
| 05 | முன் ஓய்வுதிய 30%அனுகூலங்கள். | 28199 | 27811 |
| 06 | வெளிநாட்டில் நிரந்தரமாக குடியேறுவதன் பேரிலான அனுகூல கொடுப்பனவு. | 2808 | 2777 |
| 07 | அரச துறையில் அல்லது மாகாண அரச சேவையில் ஓய்வுதிய பதவியை வகித்து சேவையிலிருந்து விலகுவதன் பேரிலான அனுகூல கொடுப்பனவு. | 9267 | 9057 |
| 08 | அரச கூட்டுத்தாபனம் /சபை ஆட்குறைப்பு செய்யப்பட்டதன் அல்லது கம்பனியாக மாற்றப்பட்டதன் காரணமாக மூடப்படுவதனால் சேவையிலிருந்து விலகு கின்ற உறுப்பினர்களுக்கான அனுகூல கொடுப்பனவு. | 58 | 57 |

அட்டவணை 2.2.1.8 – அனுகூலத்திற்கான விண்ணப்பப்படிவங்களை தீர்மானக் கடிதங்களை மத்திய வங்கிக்கு அனுப்புதல் - 2019

- **அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்கள்**

ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்களைக் கொண்ட 123 நிறுவனங்கள் காணப்படுவதுடன். அதிலுள்ள உறுப்புரிமை 134,456 ஆகும். உதவு தொகைகளை வரவிலிடுவதனையும், அனுகூலங்களை கொடுப்பனவு செய்வதனையும் உள்ளடக்குகின்ற அத்தகைய நிதியங்களின் இயக்கம் தொழில் திணைக்களத்தால் கண்காணிக்கப்படுவதுடன், சரியாக தொழிற்படாத அந்த நிறுவனங்கள் நீதிச் செயற்பாட்டினூடாக ஊழியர் சேமலாப நிதியத்தின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்றன.

| | |
|---|---|
| பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 85 |
| தீர்க்கப்பட்ட மற்றும் கோப்புகள் மூடப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 89 |
| கள அலுவலர்களால் கண்காணிக்கப்படுகின்ற தனியார் சேமலாப நிதியங்கள் பற்றிய அறிக்கைகளின் எண்ணிக்கை | 197 |
| கண்காணிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 123 |

அட்டவணை 2.2.1.9 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றம் - 2019

- **நிதியத்தை மேம்படுத்தல்**

நிதியத்தின் நிருவாகத்தை மேம்படுத்துகின்ற அதேவேளையில் உறுப்பினர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு பின்வரும் பணி இலக்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **ஊ.சே.நி கணக்கின் நிலுவையின் அடிப்படையில் வீடமைப்புக் கடன்களை வழங்குதல்**

உறுப்பினர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கில், ஊ.சே.நி கணக்கின் நிலுவையை பிணைப்பொறுப்பாக வைப்பதற்கும் ஆகக்கூடியது 75% இற்கமைவாக வீடமைப்புக் கடனைப் பெறுவதற்கும் வசதிகள் காணப்படுகின்றது. இதன்படி, ஆண்டுகாலப்பகுதியில் 10,022 வீடமைப்பு கடன் விண்ணப்பப்படிவங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. அனுமதி அளிக்கப்பட்ட தொகை 5.10 பில்லியன் ரூபாவாகும்.

- **ஊ.சே.நிதியத்தை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்துகின்ற கருத்திட்டங்கள்**

  தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களிடையே ஊ.சே.நிதியம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் மற்றும் பதிவுகளை விரிவாக்கும் நோக்கில் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளில் விளம்பரங்கள் செய்து பிரபல்யப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக 16 நடமாடும் சேவைகள் நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கி நடத்தப்பட்டிருந்ததுடன், இந்த சேவையிலிருந்து நன்மை பெற்றோர் 965 பேராவர்.

- உறுப்பினர்களின் தகவல் வேறுபாட்டை திருத்துவதற்காக சேவையை பரவலாக்குவதனூடாக, அவர்களின் நேரம். ஊழைப்பு மற்றும் பணத்தை சேமித்து உறுப்பினர்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றப்பட்டு அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டது.

- தரவு முறைமை மற்றும் கொடுப்பனவு தரவு முறைமையைக் கண்காணிப்பதற்கும், அணுகுவழியை அதிகரிப்பதன் மற்றும் வலையமைப்பு தொடர்பினை விரிவுபடுத்துவதன் மூலம், சேவைகளின் வினைத்திறன் அதிகரிக்கப்பட்டு அதனால் தலைமை அலுவலகத்திற்கு வருகைதரும் உறுப்பினர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படுகின்றது.

### 2.2.1.6 பணியாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு

பணியாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக திணைக்களத்தின் ஒரு தொகுதி சட்டவாக்கங்களை நடைமுறைப்படுத்துகின்றது. இணக்கப்பாடொன்றை அடைவதற்கு தவறும்பட்சத்தில் பணியாளர்களுக்கான நியதிச்சட்ட உரித்துக்களை வழங்குவதற்கு அடிப்படை சட்ட நடவடிக்கையைத் தேவைப்படுத்தியுள்ளபோதிலும், உரிமைகளை மீறுவதனைத் தடுப்பதற்கும், பணியாளர்களின் உரிமைக்கு பயனுறுதியளிப்பதற்கும் சட்ட நடவடிக்கைமுறையை உருவாக்குவதன் மூலம் நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | **சட்டம்** | **தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** | **தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | 2546 | 1288 |
| 2 | கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | 1143 | 726 |
| 3 | தொழில் முடிவுறுத்தல் சட்டம் | 156 | 53 |
| 4 | சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் | 52 | 33 |
| 5 | கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | 21 | 8 |
| 6 | மகப்பேற்று நன்மைகள் சட்டம் | 62 | 40 |
| 7 | பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவர் தொழில் சட்டம் | 3 | 2 |
| 8 | ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் | 1 | 2 |
| 9 | தொழில் நியாயாதிக்க கட்டளைகள் | 0 | 1 |
| 10 | வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம் | 82 | 48 |
| 11 | அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியம் | 0 | 0 |

அட்டவணை 2.2.1.10 - அனைத்து மாவட்ட அலுவலகங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் தீர்க்கப்பட்ட வழக்குகளும் - 2019

குறிப்பு : அட்டவணை தற்போது பெறப்பட்ட தரவின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாகையால், இந்தத் தரவு வேறுபடக்கூடும்.

| **நீதிமன்றம்** | **2019 ஆம் ஆண்டுக்குக் கொண்டுவரப்பட்ட நிலுவை** | **2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட வழக்குகள்** |
|---|---|---|
| மேல் நீதிமன்றம் | 205 | 0 |
| மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் | 383 | 2 |
| உயர் நீதிமன்றம் | 178 | 46 |
| மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக உயர் நீதிமன்றம் | 216 | 17 |

அட்டவணை 2.2.1.11 – வழக்குகளின் நீதிமன்றச் செயலாற்றுகை - 2019

## 2.2.1.7 நிருவாகம் மற்றும் நிருமாணச் செயற்பாடுகள்

### I. நிருவாகம்

உச்சளவிலான பதவியினரைப் பேணுவது, திணைக்களம் அதன் கடமைகளை வினைத்திறனுடனும், பயனுறுதிவாய்ந்ததாகவும் ஆற்ற உதவுகின்றது.

இதன்படி, மனிதவளங்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல், சேவையில் பணியாளர்களை உறுதிப்படுத்துதல், அவர்களின் செயலாற்றுகையை மதிப்பிடுதல், வேதன அதிகரிப்பினை வழங்குதல், குறித்த காலப்பகுதிக்குள் வினைத்திறன்தடைகாண் பரீட்சையை நடத்துதல், இடமாற்ற நடவடிக்கை முறையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஏனைய வழமையான நிருவாகத் தொழிற்பாடுகள் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேற்சொல்லப்பட்ட தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக, நிருவாகக் கடமைகளை உச்ச அளவில் ஆற்றுவதற்காக பின்வருகின்ற செயற்பாடுகள் ஆற்றப்பட்டிருந்தன.

- திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் செய்திகள், நினைவூட்டல் மற்றும் அவசரகால அறிவித்தல்களை குறிப்பிடுவதற்கு குறுஞ் செய்தி சேவையொன்று ஆரம்பிக்கப்படமை.

- திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களினதும் தனிநபர் கோப்பிலுள்ள தகவல் கண்ணோட்டத்தை கூட்டிணைக்கின்ற 'கூகிள் றைவ்' தரவு முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், தனிநபர் கோப்பிலுள்ள தகவல்கள் கூகிள் றைவ்வினைப் பயன்படுத்தி நாளதுவரைப்படுத்துவதற்கும் சரியான தகவல்களை நாளாந்தம் ஒன்றுசேர்ப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- தொழில் செயலக வளாகத்தில் சேருகின்ற குப்பைகளை உரியமுறையில் அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பின்பற்றி குப்பைகளை மீள்சுழற்சிக்குட்படுத்துவதும் சுற்றாடலுக்கு குப்பை செல்வதைக் குறைப்பதும்.

### II. நிருமாணங்கள்

நாடளாவியரீதியில் பரந்திருக்கின்ற தொழிலாளர் சமூகத்திற்கு வினைதிறன் மிக்க சேவையை வழங்கும் நோக்கில் மாவட்ட தொழில் அலுவலகங்கள் நாடளாவியரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தாபிக்கப்பட்டன. நவீன வசதிகளுடன் இந்த அலுவலகங்களை நிருமாணிப்பதன் மூலம், சேவை நாடுநர்கள் திருப்தியான சேவையை பெறமுடியுமென்பதுடன், திணைக்களத்தின் அலுவலர்கள் குறித்த பணிச் சூழலின் உருவாக்கத்தினூடாக பயனுறுதிவாய்ந்த சேவையை வழங்குவதற்கான வாய்ப்பினையும் பெறுவர்.

இதன்படி, குருணாகல், புத்தளம், நீர்கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகங்களிலுள்ள கட்டமைப்பு வசதிகள் தரமுயர்த்தப்படடிருந்தன. நிருமாணச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அம்பலாங்கொடை, நாவுல, ஹட்டன் மற்றும் பதுளையிலுள்ள தொழில் அலுவலகங்களில் உரிய ஆண்டுக்கான நிருமாணங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக மெஹேவரபியஸ மற்றும் அனுராதபுர தொழில் அலுவலகத்தின் நிருமாணச் செயற்பாடுகள் நிறைவுசெய்யப்பட்டிருந்தன.

திணைக்கள வளாகத்தில் 'மெஹேவரபியஸ' கட்டட நிருமாணம் அதிமேதகு சனாதிபதியில் 2019 ஆம் ஆண்டில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.



படம் 2.2.1.3 2019 ஒகஸ்ட் 20 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களால் "மெஹேவர பியஸ" கட்டட அங்குரார்ப்பணம் செய்யப்படுதல்

### III. நூலகம் மற்றும் தகவல் சேவை

திணைக்களமானது, திணைக்களத்தின் பணியாளர்களிடையேயும் பொது மக்களிடையேயும் பாரியளவில் தொழில் துறை பற்றிய அறிவினைப் பரப்புவதற்காக நூலகத்தை பராமரிக்கின்றது. இதன்படி,வாசகர்களின் அறிவிற்காகவும், புரிதலுக்காகவும் மற்றும் மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும் 216 புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 2.2.1.8 நிதி முகாமைத்துவம்

திணைக்களமானது, அரச கொள்கைகளுடன் இணங்கும் வகையில் 2019 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலிருந்து திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி மூலங்களை வினைத்திறனுடனும், பயனுறுதிவாய்ந்ததாகவும் சிக்கனமாக நிருவகிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன்படி, மீண்டெழும் செலவீனம் 82% மற்றும் மூலதன ஏற்பாடு 98% 2019 ஆம் ஆண்டில் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவீனம் | ஏற்பாடு (ரூபா) | 2,207,000,000 |
| | செலவீனம் (ரூபா) | 1,801,245,439 |
| முதலீட்டு செலவீனம் | ஏற்பாடு (ரூபா) | 1,522,010,000 |
| | செலவீனம் (ரூபா) | 1,307,883,464 |

அட்டவணை 2.2.1.12 - 2019 ஆம் ஆண்டுக்கான திணைக்களத்தின் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்

| செலவீனத்தின் வகை | ஆண்டுக்கான ஏற்பாடு 2019 | உண்மையான செலவீனம் 2019 | ஏற்பாடுகளின் வீதமாக உண்மையான செலவீனம் |
|---|---|---|---|
| மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் தரமுயர்த்தலும் | 58,490,000 | 41,965,156 | 71.7% |
| மூலதன சொத்துக்களின் பெறுகை | 1,447,920,000 | 1,252,189,466 | 86.5% |
| மொத்தம் | 1,506,410,000 | 1,294,154,621 | 85.9% |

அட்டவணை 2.2.1.13 - 2019 ஆம் ஆண்டுக்கான மூலதனச் செலவீனத்தின் வகைப்பாடு

## 2.2.1.9 புள்ளிவிபரவியல் பிரிவின் செயற்பாடுகள்

இலங்கை தொழில் துறையின் ஆற்றுப்படுத்தலை விருத்தி செய்வதற்கு தொழில் துறை தொடர்பான தகவலை சேகரித்தலும் பகுத்தாராய்தலும். தொழில் சட்டவாக்க திருத்தங்களுக்கான தேவையை இனங்கண்டு எதிர்காலத்திற்கான திட்டங்களை வகுப்பது புள்ளிவிபரவியல் பிரிவின் பிரதான தொழிற்பாடாகும்.

இதன்படி, 2019 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

| நிகழ்ச்சித்திட்டங்கள் /செயற்பாடுகள் | 2019 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட கடமைகள் |
|---|---|
| 1. வருடாந்த தொழில்வாய்ப்பு கணப்பெடுப்பு 2017 | அச்சிடப்பட்ட வடிவத்தில் வெளியிடுதலும், அதனை இணையத்தளத்தில் பதிவிடுதலும். |
| 2. வருடாந்த தொழில்வாய்ப்பு கணப்பெடுப்பு 2018 | அச்சிடுவதற்காக அறிக்கை தயாாப்படுத்தப்படு கின்றது. |
| 3. தொழில் புள்ளிவிபரவியல் வருடாந்த வெளியீடு 2017 | அச்சிடுவதற்காக தயாா்ப்படுத்தப்படுகின்றது |
| 4. தொழில் புள்ளிவிபரவியல் வருடாந்த வெளியீடு 2018 | ஆட்டவணைகளைத் தயாரிப்பது முடிவுறுகின்றது |
| 5. பணியாற்றிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் தொழில் செலவு பற்றிய புதிய கணக்கெடுப்பு – ஆரம்பம் | கேள்விகளைத் தயாா்ப்படுத்துதலும் முன் பரிசோதனையும் முடிவுறுகின்றது |
| 6. பணியாற்றிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் தொழில் செலவு பற்றிய புதிய கணக்கெடுப்பு – 2019 (நான்காவது காலாண்டு) | கேள்விக்கொத்து தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 7. ஆகக்குறைறந்த வேதன வீத சுட்டியை கணித்தல் | கணிக்கப்பட்டு சமா்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 8.ஊ.சே.நிதியத்தின் புதிய பதிவுகளை கணினி மயப்படுத்துதல் | இந்த நோக்கத்திற்காக தரவுத் தளமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், தரவு ஏற்றப்பட்டு நாளதுவரைப்படுத்தப்படுகின்றது. |

அட்டவணை 2.2.1.14 – ஆற்றப்பட்ட தொழிற்பாடுகள் - 2019

### 2.2.1.10 திணைக்களத்தின் தொழிற்பாடுகளை மற்றும் மனிதவளங்களின் அபிவிருத்தியை கண்காணிப்பதன் மூலம் இலக்குகளை நோக்கி வழிநடத்துதல்

**I திணைக்களத்தின் தொழிற்பாடுகளை கண்காணிப்பதன் மூலம் இலக்குகளை நோக்கி வழிநடத்துதல்**

அனைத்து மாவட்ட , உப தொழில் அலுவலகங்கள் மற்றும் திணைக்களத்தின் அனைத்தப் பிரிவுகளின் தொழிற்பாடுகளை கண்காணிப்பதனூடாக திணைக்களத்தின் செயற்றுகையை மேம்படுத்துதல் மற்றும் செம்மைப்படுத்துதல் அத்துடன் இலக்குகளை அடைவதனை நோக்கி பணியாற்றுதல் என்பன தொழில் திணைக்களத்தின் இலக்குகளை அடைவதற்கான முதன்மையான தேவைப்பாடாகும்.

இதனை அடைவதனை நோக்கி திணைக்களத்தின் வருடாந்த செயற்றிட்டம் - 2019 தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அனைத்துப் பிரிவுகளினதும் முன்னேற்றத்தை மீளாய்வதற்கு மாதாந்த கூட்டம் நடத்தப்பட்டது.

இதேபோன்று, மாவட்ட / உப தொழில் அலுவலகங்களுக்காக காணப்படுகின்ற கண்காணிப்பு முறைமை 2018 ஆம் ஆண்டில் மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேலும் முறைசார் நிகழ்ச்சித்திட்டமொன்றாக மீள்வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த முறைமை அனைத்து மாவட்ட / உப தொழில் அலுவலகங்களையும் உள்ளடக்கும் வகையில் மேலும் விருத்தி செய்யப்பட்டிருந்தது. அலுவலர்களால் நடத்தப்பட்ட கள பரிசோதனைகளின் தரத்தை அதிகரித்தல், அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் செம்மைப்படுத்தல் பிரதேசங்களில் ஊ.சே.நி உதவுதொகைகளை அறவிடுவதில் வினைத்திறனை அதிகரித்தமை, ஊ.சே.நி அனுகூலக் கொடுப்பனவில் வினைத்திறனை அதிகரித்தமை, பிணக்குகளைத் தீர்க்கின்ற செயல்முறையில் வினைத்திறனை மேம்படுத்துதல், எழுத்தணை முன் வழக்குகள் மற்றும் செயலற்றுக் காணப்படுகின்ற வழக்குகளை மீளச் செயற்படுத்துவதற்கு அனைத்து சாதகமான நடவடிக்கைகளையும் எடுத்தல் மற்றும் பொதுக் கணக்குகளில் வைப்புச்செய்யப்பட்ட பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய பெறுபேறுகளாகும்.

மேலும், அனைத்து மாவட்டங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்களையும் பரிசோதித்து ஒவ்வொரு அலுவலகத்தின் முன்னேற்றம் பற்றிய பகுப்பாய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்ததன் பின்னர் முன்னேற்ற ஆய்வு கூட்டங்கள் பிராந்திய மட்டத்தில் நடத்தப்பட்டிருந்தன. இந்த முன்னேற்ற ஆய்வு கூட்டங்களில், அலுவலகமொன்று குறித்த தொழிற்பாடொன்றில் உயர் மட்ட முன்னேற்றத்தை அடைந்திருந்தபோதிலும், பிறிதொரு தொழிற்பாடு தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்ற மட்டத்தை அடையத் தவறியிருந்தமையை அவதானிக்க முடிந்திருந்தது. ஆகவே, மேலுள்ள அனைத்து தொழிற்பாடுகள் தொடர்பிலும் இலக்கொன்றை நிர்ணயிப்பதற்கு பிராந்தியங்களுக்கு பொறுப்பான பிரதி தொழில் ஆணையாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன், அத்தகைய இலக்குகளை 2020 ஆம் ஆண்டில் அடைவதற்கு மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்கள் வழிநடத்தப்பட்டன. ஆகவே, அனைத்து அலுவலகங்களும் அலுவலர்களும் 2020 ஆம் ஆண்டில் இலக்கு ஒவ்வொன்றையும் அடைந்துள்ளார்களா இல்லையா என்று மதிப்பிடுவது சாத்தியமாவதுடன், இதன்படி செயலாற்றுகை மதிப்பிடப்படும்.

**II மனித வளங்கள் அபிவிருத்தி**

திணைக்களத்தின் அலுவலர்களால் ஆற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுள்ள வகிபாகம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் செய்முறை நடவடிக்கைகளை எடுப்பதற்கான இயலுமை திணைக்களத்தால் வழங்கப்பட்ட சேவைகளின் தரத்தைத் தீர்மானிக்கின்றது. இதன்படி, இத்திணைக்களம், அலுவலர்களின் பயிற்சிக்கான தேவைகளை இனங்கண்டு, கேட்கப்படுகின்ற பயிற்சிகளை வள ஆளர்களின் உதவியுடன் வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக, வெளிவாரி நிறுவகங்களால் நடத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு தேவைப்பட்ட நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படுவதுடன், வெளிநாட்டு பயிற்சிக்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றபோதெல்லாம், தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், நிதி ஏற்பாடுகளும் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

| தொ. இ. | நிகழ்ச்சித்திட்டம் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | தொழில் சட்டங்கள் பற்றிய பயிற்சி அமர்வுகள் | 04 | 298 |
| 02 | ஊ.சே.நி தொடர்புபட்ட செயற்பாடுகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 18 | 1023 |
| 03 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 02 | 100 |
| 04 | தமிழ் மொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 30 |

| தொ. இ. | நிகழ்ச்சித்திட்டம் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங் களின் எண்ணிக்கை | புங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 05 | புதிய அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் களுக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 01 | 80 |
| 06 | புதிய அலுவலக உதவியாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் | 01 | 11 |
| 07 | சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 80 |
| 08 | ச.தொ.தாபனம் அனுசரணையளித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 09 | 259 |
| | **மொத்தம்** | **37** | **1881** |

அட்டவணை 2.2.1.15 –அலுவலர்களுக்காக திணைக்களத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்- 2019



படம் 2.2.1.4 திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| தொ.இ. | நிகழ்ச்சித்திட்டம் | ஏற்பாடுகள் வழங்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பட்டப்பிற்படிப்பு பட்டங்கள் | 20 |
| 2 | சட்ட பட்டங்கள் | 15 |
| 3 | சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் பயிற்சியமர்வுகள் | 14 |
| | **மொத்தம்** | **49** |

அட்டவணை 2.2.1.16 – வெளிவாரி பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்பட்ட பயிற்சிகளுக்காக திணைக்களத்தின் அலுவலர்களுக்கான ஏற்பாடுகளுக்குரிய ஒதுக்கீடு -2019

| செலவினத் தலைப்பு | ஆண்டுக்கான ஏற்பாடு2019 (&பா) | 2019.21.31 இலுள் ளவாறு செலவினம் (ரூபா) | 2019.21.31 இலுள்ளவாறு நிலுவை (ரூபா) | ஏற்பாடுகளின் வீதமாக செலவீனம் |
|---|---|---|---|---|
| 221-01-01-2401 | 5,600,000.00 | 5,592,044.00 | 7,956.00 | 99.86% |
| 221-02-02-2401 | 160,000.00 | 155,177.00 | 4,823.00 | 96.99% |
| 221-02-03-2401 | 560,000.00 | 535,610.00 | 24,390.00 | 95.64% |
| 221-02-04-2401 | 2,250,000.00 | 2,149,411.37 | 100,588.63 | 95.53% |
| **மொத்தம்** | **8,570,000.00** | **8,432,242.37** | **137,757.63** | **97.01 %** |

அட்டவணை 2.2.1.17 – 2019.12.31 இலுள்ளவாறு இயலுமையை வளர்ப்பதற்கான செயற்பாடுகளுக்கான ஒட்டுமொத்தச் செலவீனம்

**2.2.1.11 சேவைகளை வழங்குவதற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்**

சேவைநாடுநர்களுக்கு சேவையை வழங்குவதில், திணைக்களமானது, தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கணினி முறைமையினூடாக அத்தகைய சேவைகளை வழங்குவதன் மூலம் அணுகுவழியைப் பெறுகின்ற வசதியை செம்மைப் படுத்துவதற்கு அதிகம் கவனம் செலுத்தியுள்ளது. கணனிமுறைமையொன்று தற்போது ஊ.சே.நிதியத்தின் தொழிற்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படுவதுடன், தொழில் பரிசோதனைகள், நிறுவனம்சார் பரிசோதனைகளின் செயலுறும் மட்டத்தினை ஆய்வு செய்தலும், செய்ய வேண்டித் தேவைப்பட்டுள்ள செம்மைப்படுத்தல்களும், முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் மேலதிக செம்மைப்படுத்தல்களுக்கு தேவைப்படுகின்ற முறைமை போன்றவற்றின் தரவு சேகரிப்புக்காக 2015 ஆம் ஆண்டிலிருந்து தொழில் பரிசோதனை முறைமை விண்ணப்பப்படிவம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த இரண்டு கணினி முறைமைகளும் திணைக்களத்தின் அக முன்னேற்றங்களை இலகுபடுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. சேவைநாடுநர்களுடன் நேரடித் தொடர்பினைப் பேணுவதற்கு மேலும் செம்மைப்படுத்தபட்ட வேண்டியிருக்கின்றன. கையடக்கத் தொலைபேசியினூடாக சேவையின் தேவைப்படுகளை அணுகுவதற்கு தேவைப்பட்ட வசதிகளை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ள ஆரம்ப கலந்துரையாடல்கள் இடம்பெற்றுகொண்டிருக்கின்றன.

இதற்கு மேலதிகமாக, மக்கள் சேவைகளை, பல்வேறு சட்டங்கள், கட்டளைச்சட்டங்கள் மற்றும் தொழில்தருநர்களால் அவதானஞ் செலுத்த வேண்டிய சம்பளச்சபைகளின் முடிபுகள் போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கு தேவைப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்கள் போன்ற அத்தகைய ஆவணங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளன.

இதன்படி, திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக வழங்கப்பட்டுள்ள சேவைகள் பின்வருமாறு.

| தொ. இ. | காலப்பகுதி | சேவை | இலக்கு குழுமம் |
|---|---|---|---|
| 01 | 2019 ஆம் ஆண்டு முழுவதும் | • பயனாளிகளுக்குத் தேவையான அனைத்து விண்ணப்பப்டிவங்களும் மூன்று மொழிகளிலும் இணையத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளதுடன், பதிவி றக்கம் செய்யவும் முடியும்.<br>• புள்ளிவிபரவியல் தகவல், தொழில் புள்ளி விபரங்கள், வருடாந்த தொழில் கணக்கெடுப்புகள் மற்றும் ஆண்டறிக்கை என்பன மூன்று மொழி களிலும் இணையத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளதுடன் பதிவிறக்கம் செய்யவும் முடியும். | உள்வாரி மற்றும் வெளிவாரி சேவை நாடுநர்கள் |
| 02 | 2019 ஆம் ஆண்டு முழுவதும் | இணையத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ள தகவல்களை நாளது வரைப்படுத்துதல்<br>• தலைமை அலுவலகத்தின் பிரிவுகளால் வழங்கப்பட்டுள்ள சேவைகள்<br>• அனைத்து தொழில் அலுவலகங்களினதும் தொடர்பு விபரங்கள்<br>• அடிக்கடி கேட்கும் கேள்விகளும் அதற்கான பதில்களும் | உள்வாரி மற்றும் வெளிவாரி சேவை நாடுநர்கள் |
| 03 | 2019 ஆம் ஆண்டு முழுவதும் | திணைக்களத்தின் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகள், அவற்றின் பெறுபேறுகள், வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் விலை கூறல் அழைப்புகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆட்சேர்ப்புத்திட்டங்கள், தொழில் சட்ட வாக்கங்கள் மற்றும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள், திணக்களம்சார் சுற்றிக்கைகள் திணைக்களத்தின் சிரேஷ்ட நிலை ஒழுங்கு மற்றும் தொழில் சங்கத்தின் பட்டியல் போன்றவற்றின் விபரங்கள் | உள்வாரி மற்றும் வெளிவாரி சேவை நாடுநர்கள் |
| 04 | 29.22.2019 | தொழில் திணைக்களத்தின் சுற்றுலா பங்களா பற்றிய தகவல்களை பதிவிடல் | உள்வாரி மற்றும் வெளிவாரி சேவை நாடுநர்கள் |

அட்டவணை 2.2.1.18 – திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக வழங்கப்பட்ட சேவைகள்– 2019

#### 2.2.1.2 அகக் கணக்காய்வு

ஏனைய அனைத்து அரச துறை நிறுவனங்களைப் போன்று, தொழில் திணைக்களமும், அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் விநியோகிக்கப்படும் நிதி ஒழுங்குகள், சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி தனது அனைத்துச் செயற்பாடுகளையும் ஆற்றவேண்டியிருக்கின்றது. அத்தகைய செயற்பாடுகள் முறையான வளங்களைப் பயன்படுத்தி உச்சளவிலான வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படுகின்றதா என்று மேற்பார்வையிடுதல் தொழில் ஆணையாளர் அதிபதியின் நேரடி மேற்பார்வையிடலின் கீழுள்ளது. இதன்படி, 2019 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு.

- அகக் கணக்காய்வுப் பிரிவினால் 2019 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத்திட்டத்தின்படி, உரிய ஆண்டில் 06 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பிராந்திய அலுவலகமொன்று மற்றும் தலைமை அலுவலகத்தில் வேதனப் பிரிவு பரிசோதிக்கப்பட்டிருந்தன.

- திணைக்களத்தின் பல்வேறு அலுவலகங்களைப் பரிசோதித்ததன் பின்னர் அரசாங்க கணக்காய்வுப் பிரிவுனால் வழங்கப்பட்ட 28 கணக்காய்வு கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டிருந்தது.

- ஆய்வாண்டு காலப்பகுதியில் 04 காலாண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

# 2.2.2

## மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

2010.02.12 ஆம் திகதிய 1640/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஏற்பாட்டு நியமங்களுக்கமைய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. தற்போது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற இந்தத் திணைக்களத்திற்கு அரச வேலை வாய்ப்புச் சேவைகளை பேணிவருகின்ற மற்றும் தேசிய மனித வளங்கள், தொழில்வாய்ப்புக் கொள்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பு குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

### தொலைநோக்கு

உலக தரத்திலான இலங்கையர் தொழிலணி

### செயற்பணி

அபார தகுதிகளுடன் கூடிய உலகளாவியரீதியிலான போட்டித்தன்மையுடைய செயற்றிறனுள்ள தொழில் அணியினை விருத்தி செய்தல் மற்றும் இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காக எமது மனித வளங்களின் முழுமையான ஆற்றலைப் பயன்படுத்துதல்

### 2.2.2.1 திணைக்களத்தின் குறிக்கோள்கள்

- தேசிய மனித வளங்கள் கொள்கையை வகுத்தமைத்து நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- பொருந்தாத திறன்கள் என்ற கட்டமைப்புப் பிரச்சினையைத் தீர்த்தல்.
- தற்போது தொழிலணியிலிருக்கின்ற அனைத்து இலங்கையர்களுக்கும், எதிர்காலத்தில் தொழிலணிக்குள் நுழைய விருக்கின்றவர்களுக்கும் சரியான தொழில்சார் ஆற்றுப் படுத்தலைத் தீர்மானிப்பதற்கு வசதிகளை வழங்குதல்.
- மனிதவலு வழங்கலைத் திட்டமிடுதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆரம்பித்தல்.
- முறைசாரா துறையினை விருத்தி செய்தல்.
- தனியார் துறையில் தொழில்களைப் பெறுவதற்காக தொழில் நாடுநர்களை ஊக்குவித்தல்.
- இலவச அரச தொழில் சேவையை வழங்குதல்.
- பாதிப்படையக்கூடிய குழுமங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பற்ற பிரதேசத்தில் இருக்கின்ற மக்களுடன் தொடர்புபட்ட மனிதவலு மற்றும் தொழில் வசதிகளை வழங்குதல்.
- அனைத்து இலங்கையர்களுக்கும் தொழில் சந்தை பற்றிய சரியான உலக மற்றும் உள்நாட்டுத் தகவல்களை வழங்குதல்.
- உள்நாட்டு மற்றும் உலக தொழில் சந்தைகளின் போக்குகளைத் திட்டமிடுதல்.

#### 2.2.2.2 2019 டிசெம்பர் 31 வரையான நிதிசார் முன்னேற்றம்

| | வரவுசெலவுத் திட்ட ஏற்பாடு 2019 (ரூ.000) | 15% கழிப்பனவு | 10% கழிப்பனவு | கழிப்பனவின் பின்னர்2019 வரவுசெலவுத் திட்ட ஏற்பாட்டின் 25% | செலவினம் கழிப்பனவு (&.000) | வீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 387,000 | - | - | 387,000 | 374,398 | 96.74% |
| மூலதன செலவினம் | 35,000 | 5,250 | 1,975 | 27,775 | 25,459 | 91.66% |
| மொத்தம் | 422,000 | | | 414,775 | 399,857 | 96.40% |

அட்டவணை 2.2.2.1 – 2019 திசெம்பர் 31 வரையான நிதி முன்னேற்றம்

### 2.2.2.3 தொழில் உருவாக்கம், மேம்படுத்தல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல்




விளக்கப்படம் 2.2.2.1 – தொழில்வாய்ப்பு உருவாக்கம், மேம்பாடு மற்றும் தொழில் வழிகாட்டல்

### 2.2.2.4 மனிதவலு திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

I. **தேசிய தொழில் நிலையம்**

இந்த அலகு, மனிதவலு அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் கீழ் இயங்குகின்றது. இந்த நிலையங்கள், நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களில் தொழிற்படுவதுடன், தேசிய அரச தொழில்வாய்ப்பு சேவை நிலையம் பத்திரமுல்லை அலுவலக வளாகத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

**தொழில்வாய்ப்பு நிலையத்தின் செயல்முறை**




விளக்கப்படம் 2.2.2.2 – தொழில் நிலையத்தின் செயல்முறை

தொழில்களை நாடுவேரை பதிவுசெய்வது பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றது. அவை பற்றிய தகவல்கள் தொழில் சந்தை மற்றும் தொழில்வாய்ப்புச் சேவை நிலையங்களின் மனித வளங்கள் அபிவிருத்தி உதவியாளர்களினுடாக பிரதேச மட்டத்தில் சேகரிக்கப்படுகின்றன. தொழில் நாடுநர்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

தொழில்களை நாடுவோர் இணையத்தள தொழில்வாய்ப்பு சேவை ஏற்பாட்டினுடாகவும் (www.dome.gov.lk) பதிவுசெய்ய முடியும் என்பதுடன் தொழில்தருநர்களும் இங்கு பதிவு செய்யலாம் என்பதுடன் தொழில்நாடுநர்களை தமது தேவைப்பாடு களுக்கேற்ப தெரிவுசெய்யவும் முடியும்.

இதேபோன்று, தொழில்நாடுநர்களுக்கு தொழில் வழிகாட்டல்கள் வழங்கப்படுவதுடன்,அரச தொழில்வாய்ப்பு சேவை நிலையத்தினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் அனுப்பப்படுகின்றனர். அத்துடன், ‘கறிய மீ’ நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் இலவசமாக பங்குபற்றுவதற்கு தொழில்நாடுநர்களுக்கு வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, தொழில்சார் வல்லுநர்கள் அவர்களது சேவையை வழங்குவதற்கு இந்த இணையத்தைப் பயன்படுத்தி திணைக்களத்துடன் பதிவுசெய்துகொள்ள முடியும் என்பதுடன், அத்தகைய தொழில்சார் சேவைகள் தேவைப்படுவோர் தமது தெரிவின்படி அவற்றை அணுகவும் முடியும்.

கைப்பேசி விண்ணப்பமொன்றினுடாகவும் மேற்சொல்லப்பட்ட சேவையைப் பெறுவதற்கு மென்பொரு விருத்தி செய்யப்பட்டுள்ளது. மேலுள்ள இணையத்தளத்தை விருத்தி செய்வதற்கு இரண்டு கருத்திட்டங்களுக்கு சர்வதேச தொழில் தாபனம் அனுசரணை வழங்குகின்றது.



படம் 2.2.2.1 கேகாலை மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம்

### II. தொழில் சந்தை தகவல் அலகு

இந்த அலகு, தொழில் சந்தை பற்றிய தகவல்கள், பல்வேறு துறைகளின் கொள்கை ஆக்குநர்கள் அதேபோன்று கல்வித் துறையிலிருக்கின்ற கல்வி நிகழ்ச்சித்திட்ட விருத்தியாளர்கள் மற்றும் பயிற்சி, திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்திசெய்பவர்கள் போன்றோரினால் தேவைப்படுத்தப்படுகின்றது. இத்திணைக்களத்தின் தொழில் சந்தை தகவல் அலகு, தொழில் சந்தை ஆய்வுகளை நடத்துவதுடன், அபிவிருத்தித் தேவைப்பாடுகளை ஆராய்வதுடன், தொழில் வழங்கல் மற்றும் கேள்வி பற்றி ஆய்வதுடன் அதன் காண்பிப்புகளை பரப்பி வருகின்றது. இந்த அலகு, தொழில் சந்தை சஞ்சிகை மற்றும் பாடசாலையை அடிப்படையாகக்கொண்ட கைந்நூலை வெளியிடுகின்றது.

### III. தேசிய மனிதவளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கை

இந்த அலகானது, மனிதவலு திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் கீழ் இயங்குகின்றது. தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கையானது, அரசாங்கத்தின் இடைக்கால அபிவிருத்திக் கொள்கை சட்டக் கட்டமைப்புடன் இணைக்கப்படுவதற்காக 2017 ஆம் ஆண்டில் மீளாயப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட கொள்கைக்கும், இடைக்கால செயற்றிட்டங்களின் நியதிகளிளின்படி இக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து அமைச்சுகளினதும் ஒருங்கிணைப்புக்கும் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டு, மதிப்பீடு மற்றும் முன்னேற்றத்தை அறிக்கையிடுவது இந்த அலகினால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் பங்காளர்களாக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு மற்றும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றமும் புனரமைப்பும், வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு ஆகியன சேவையாற்றுகின்றன.

**2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம்**

| இல. | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | 2019 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2019.01.01 – 2019.12.31 வரையான முன்னேற்றம் | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி ரூபா. மில். | பௌதீகம் | நிதி ரூபா. மில். | |
| தொழில்வாய்ப்பை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல் பிரிவு | | | | | | |
| 1 | க.பொ.தா சா.த. மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 1865 | 1.100 | 2023 | 1.180 | 58,455 |
| 2 | க.பொ.தா உ.த. மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 1328 | 1.240 | 1289 | 1.304 | 40,108 |
| 3 | சுயதொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 311 | 0.777 | 407 | 0.714 | 14,329 |
| 4 | தொழில்சார் சவால்களிலி ருந்து வெளிவருதல் | 50 | 0.275 | 53 | 0.227 | 2,108 |
| 5 | உள்வாரி/வெளிவாரி பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 15 | 0.567 | 11 | 0.408 | 459 |
| 6 | ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 15 | 0.428 | 24 | 0.379 | 901 |
| 7 | பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 311 | 0.817 | 435 | 0.808 | 20,437 |
| 8 | **'ஹசற'** சஞ்சிகையை அச்சிடுதல் | 2 | 0.360 | 2 | 0.344 | - |
| 9 | தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 20 | 0.455 | 26 | 0.485 | 798 |

| - | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | 2019 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2019.01.01 – 2019.12.31 வரையான முன்னேற்றம் | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி ரூபா. மில். | பௌதீகம் | நிதி ரூபா. மில். | |
| **தொழில்வாய்ப்பை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல் பிரிவு** | | | | | | |
| 10 | பிராந்திய தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம் | 120 | 0.840 | 129 | 1.038 | 13,943 |
| 11 | தேவையின் அடிப்படையிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 200 | 1.400 | 172 | 0.972 | 4,874 |
| 12 | தரைத்தோற்றம்சார் நிகழ்ச்சித்திட்டம் | 3 | 0.110 | 3 | 0.100 | 103 |
| 13 | ‘லக்றக்கியாவ ஹறசற’ நிகழ்ச்சித்திட்டம் I | 100% | 2.000 | 100% | 1.703 | - |
| | ‘லக்றக்கியாவ ஹறசற’- சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம் | 100% | 1.000 | 100% | 0.609 | - |
| **மனிதவளத் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு** | | | | | | |
| 14 | துறைசார் கற்கைகள் மாதாந்த | 26 | 0.400 | 23 | 0.087 | - |
| 15 | தொழில் சந்தை தகவல் செய்திகள் | 5 | 0.200 | 4 | 0.114 | - |
| 16 | தொழில் சந்தை தகவல் சஞ்சிகை - இறுவட்டு | 100% | 0.130 | 100% | 0.085 | - |
| 17 | தொழில் சந்தை தகவல் சஞ்சிகை | 100% | 0.200 | 100% | 0.202 | - |
| 18 | தொழில் சந்தை தகவல் சமாஜம் | 100% | 0.030 | 45% | - | - |
| 19 | சமூக, பொருளாதார தரவுகை நூல் | 100% | 1.000 | 100% | 0.795 | - |
| 20 | தொழில் சந்தை தகவல் விருத்தி | 100% | 1.000 | 85% | 0.873 | - |
| 21 | கேள்விகளின் பேரிலான காலாந்த அறிக்கைகள் | 100% | 0.040 | 20% | - | - |
| 22 | மாவட்ட தொழில் வாய்ப்பு நிலையங்களைத் தாபித்தலும் தரமுயர்த்துதலும் | 3 | 0.750 | 1 | 0.232 | - |
| 23 | மாவட்ட தொழிற் சந்தைகளை நடத்துதல் | 12 | 1.750 | 11 | 1.891 | 11,935 |
| 24 | தொழிலை விரும்புவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | 300 | 1.500 | 408 | 1.357 | 16,865 |

| - | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | 2019 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2019.01.01 – 2019.12.31 வரையான முன்னேற்றம் | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி ரூபா. மில். | பௌதீகம் | நிதி ரூபா. மில். | |
| <u>அரச தொழில் சேவைகள் நிலையம்</u> | | | | | | |
| 25 | அரச தொழில் சேவையைப் பராமரித்தல் | | | | | |
| | தொழிலை நாடு வேரைப் பதிவுசெய்தல் | 100,000 | | 90,550 | | 90,550 |
| | தொழில் வெற்றிடங்களைப் பதிவுசெய்தல் | 39,600 | 0.450 | 38,689 | 0.644 | 38,689 |
| | பொருத்தமான தொழில் | | | 31,343 | | 31,343 |
| | தொழிலுக்கு அமர்த்துதல் | 27,580 | | 14,832 | | 14,832 |
| 26 | தொழில்தருநர் சமாஜங்களை நடத்துதல் | 8 | 0.400 | 4 | 0.155 | 159 |
| 27 | WAPES உறுப்புரிமை- | 100% | 0.650 | | 0.503 | - |
| 28 | கம்பனிகள் மற்றும் தொழில் நாடுநர்களுக்காக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | 25 | 0.500 | 14 | 0.586 | 515 |
| <u>முகாமைத்துவ தகவல் முறைமை (MIS)</u> | | | | | | |
| 29 | தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் கள அலுவலர்களுக்கான மடிக் கணினிகளைக் கொள்வனவு செய்தல் | 100% | 3.000 | 100% | 3.000 | - |
| <u>சீரிய வேலை</u> | | | | | | |
| 30 | சமய நோக்கங்களுக்காக (பூசை) பயன்படுத்தும் மலர் வளர்ப்புக் கருத்திட்டம் மலர்மாலை கட்டி,விற்றல் - கதிர்காமம் | 100% | 1.230 | 80% | 0.748 | 266 |
| 31 | தேசிய மனித வளங்கள் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்- தகவல் தொழில்நுட்ப முறை மையைப் பேணுதல் | 100% | 0.530 | 100% | 0.513 | - |
| 32 | கண்டி மாவட்ட தொழில் வாய்ப்பு நிலையத்தை தாபித்தமை | 100% | 0.970 | 100% | 0.949 | - |
| 33 | கைநூல்களை அச்சிடுதல் | 100% | 0.641 | 100% | 0.483 | - |

அட்டவணை 2.2.2.2 ஒவ்வொரு பிரிவினதும் முன்னேற்றம் - 2019

| | |
|---|---|
| பணிக்கமர்த்துதல்கள்–மாவட்ட தொழில் நிலையங்களினுடாக | 6359 |
| பணிக்கமர்த்துதல்கள்- பிரதேச செயலகங்களினுடாக | 8473 |
| சுய தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் | 2845 |
| மொத்த பணிக்கமர்த்துதல்கள் | 17,677 |

அட்டவணை 2.2.2.3 தொழில் வாய்ப்பை வழங்குவதில் முன்னேற்றம் - 2019

**தொழில்தருநர்களுடன் நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

| திகதி | இடம் | பங்குபற்றியவர்கள் (நிறுவனங்களின் எண்ணிக்கை) | செலவினத் தலைப்பு | செலவீனம் ரூபா |
|---|---|---|---|---|
| 2019-02-07 | கேகாலை | 42 | 2-2509 | 40,000.00 |
| 2019-03-12 | கண்டி | 48 | 2-2509 | 40,000.00 |
| 2019-04-04 | காலி | 31 | 2-2509 | 40,000.00 |
| 2019-08-08 | வவுனியா | 38 | 2-2509 | 35,300.00 |

அட்டவணை 2.2.2.4 தொழில் தருநர்களுடன் நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்த முயற்சியின் அடிப்படைக் குறிக்கோள், ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நன்மை பெறுகின்றவர்களாக திணைக்களத்திற்கும், திணைக்களம் சேவைகளை வழங்கக்கூடியதுமான தொழில்தருநர்களுக்குமிடையில் சிறந்த உறவு முறையினைத் தாபிப்பதனூடாக, தொழில்வாய்ப்பு சேவைகளைப் பெறுவதும் வழங்குவதுமாகும். இதன் கீழ் முறையே கேகாலை, கண்டி, காலி மற்றும் வவுனியா போன்ற மாவட்டங்களில் 38 நிறுவனங்களில் 42,48,31 பேரின் பங்குபற்றுதலுடன் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

## 2.2.2.5 விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்

### I. 'லக் றக்கியாவ' நிகழ்ச்சித்திட்டம்

தொழில்களை நாடுகின்ற இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகள் மற்றும் ஏனைய வசதிகளுக்கான ஏற்பாடு தொடர்பில் மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை,கிளிநொச்சி,மொனறாகலை, பொலநறுவை,புத்தளம் மற்றும் கம்பஹா ஆகிய ஒன்பது மாவட்டங்களிலுள்ள பணியாளர்கள் மதிப்பிடப்பட்டிருந்தனர். விசேட வகைப்பாட்டினைப் பயன்படுத்தி உற்பத்தி சேவை, கமத்தொழில் மற்றும் சுய தொழில்வாய்ப்பு சேவை போன்றவை மதிப்பிடப்பட்டுள்ளதுடன், தங்க, வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதேபோன்று, தொழில் நிலையங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள், குறிப்பாக தொழில் நாடுநர்களைப் பணிக்கமர்த்துவது தொடர்பில் வருடாந்த செயற்றிட்டமொன்றின் இலக்குகளை அடைவது தொடர்பில் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 25 மாவட்ட தொழில்வாய்ப்பு நிலையங்களும் அவர்களின் செயலாற்றுகைக்கு ஏற்ப தரப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களின் செயலாற்றுகைக்கு ஏற்ப தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.



படம் 2.2.2.2 ''லக் றக்கியா ஹறசற'' விருது வழங்கல் வைபவம்

### II. கொரிய அரசாங்கத்தின் தலையீட்டுடன் தொழில்வாய்ப்பு மற்றும் மற்றும் தொழில் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய கொள்கை ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்

இதுவொரு கொள்கை ஆலோசனைச் செயல்முறையாகும். இது, கொரிய தொழில் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட கொரிய தொழில்வாய்ப்பு தகவல் சேவையினால் கையாளப்படுகின்றது. கொரிய தூதுவர்களின் 2019 ஆம் ஆண்டு விஜயத்தின் போது திணைக்களத்தால் வேண்டப்பட்ட 'தொழில் வாய்ப்பு வளமிடுலும் விநியோகமும்' என்பதற்கான முற்சாத்தியப்பாட்டு ஆய்வின்

பெறுபேறுகளை சமர்ப்பித்திருந்தனர். இதன்படி, இக்கருத்திட்டம், நடுத்தர மட்ட ஆபத்துள்ள கருத்திட்ட மொன்றாக இனங்காணப்பட்டிருந்தது. ஆகவே, கொரிய துதுக்குழு அவர்களது அமைச்சுக்கு சமர்ப்பித்து, 2020 மற்றும் அதற்கு மேலும் முன்மொழியப்பட்ட சாத்தியப்பாட்டு ஆய்வுக்கான அனுமதியைப் பெற வேண்டியிருக்கின்றது. அனுமதி பெற்றவுடன், தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும், வெளி வளங்கள் திணைக்களத்திற்கும் முழுக் கருத்திட்டத்திற்குமான கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**III. பூசைகளுக்கு மாலை கட்டி விற்பதற்குப் பயன்படுத்தப்படும் மலர் வளர்ப்பு கருத்திட்டம் - கதிர்காமம். இந்த கருத்திட்டத்தின் நோக்கம் கதிர்காம புனிதப் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொள்கின்ற யாத்திரிகர்களின் மலர் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்காகும்**

கதிர்காமத்திற்கு வருகைதருகின்ற பக்தர்கள் மற்றும் ஏனைய ஆலயங்களுக்கு அர்ச்சனைத் தட்டுக்கள் வழங்கப்படுகின்றன. இந்தத் தட்டுக்களுக்கு மலர் மாலை வழங்குவதே வழமையான முறையாகும். இந்த மாலைகள் பொலித்தீனைப் பயன்படுத்தி ஆக்கப்படுவதுடன், இவை சுற்றாடலுக்கு தீவிரமான பிரச்சினையாக வந்துள்ளது. ஆகவே, செயற்கையான இந்த மாலை-களைக் பயன்படுத்துவதற்கு பதிலாக இயற்கை மலர்களில் ஆக்கப்பட்ட மாலைகள் காலத்துடன் கூடிய தேவை என்பதுடன் பொருத்தமானதொன்று என்றும் கருதப்படுகின்றது.

இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம்,மலர்களையும் வழங்குவதனையும், பொலித்தீனால் ஆக்கப்பட்ட மாலைகளுக்குப் பதிலாக இயற்கை மலர்களைப் பயன்படுத்தி கட்டப்பட்ட மலர் மாலைகளை வழங்கி பக்தர்களின் தேவையை நிறைவேற்றுவதாகும். இந்த கருத்திட்டத்தின் கீழ், மலர் தாவரங்கள் வளர்க்கப்பட்டு, மாலைகள் கட்டப்பட்டு விற்கப்படுகின்றன.

# 2.2.3

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் மூலம் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் ஒன்றிணைந்தவொரு நிறுவகமாக உருவாக்கப்பட்டது. இந்த நிறுவகம், சிறந்த சுகாதார, பாதுகாப்பு நடவடிக்கைகளினூடாக தொழில்சார் விபத்துக்களையும் நோய்களையும் தடுப்பதற்காகவும் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும், செய்முறைகளையும் திருத்துவதனை முன்னெடுப்பதனூடாக ஒவ்வொரு வேலையாளுக்கு சீரிய வேலைச் சூழலொன்றை உறுதிப்படுத்தி பணிபுரிவதுடன், இந்நிறுவகம் பயிற்சிகளிலிலிருந்து நன்மைகளைப் பெறுவதற்கு விரும்புகின்ற பணியாளரின் தொழில்தருநருக்கு கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குகின்றது.

### தொலைநோக்கு

அனைவருக்கும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பல்

### செயற்பணி

வேலைத்தலத்தின் பாதுகாப்பினையும் சுகாதாரத்தையும் சேமநலனையும் உறுதிப்படுத்துவதற்குஅனைத்துவகையான வேலையுடன் தொடர்புபட்ட தீங்குகளை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஏனைய உரிய தலையீடுகளினூடாக முத்தரப்பு அக்கறைதாரர்களையும் வலுப்படுத்துதல்

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்பாடுகளும்**

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்புளோமாக் கற்கைநெறிகள்
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறிகள்.
- தொழிற்றுறைகள் மீதான வேலை ஆய்வு நிகழ்ச்சித்திட்டம்
- தொழில்சார் துறையில் தாதியர்களைப் பயிற்றுவித்தல்
- மருத்துவமனைப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- உணவினைக் கையாள்பவர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- மனவழுத்த முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- இரசாயனப் பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல்
- அலுவலகப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- ஆய்வுகூடங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- கொதிகலனை இயக்குபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- பெருந்தோட்டத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ் கற்கைநெறிகள்

#### 2.2.3.1 . சூழலியல் சேவைகள்

சூழிலியல் சேவைகள், பணியாளர்களின் வேலைச் சூழலில் சுகாதாரம் உரிய மட்டத்தில் இருக்கின்றதா என்பதை பரிசோதனை செய்கின்றன. இதன் கீழ், தொழிற்சாலைகளின் தரமான காற்றினைமதிப்பிடுதல், நுகரும் வாயுக்களை அளவிடுதல் மற்றும் தூசுக்களின் மட்டத்தை மதிப்பிடுதல், ஒலி மற்றும் சத்த மட்டங்களை மதிப்பிடுல் மற்றும் வெப்ப மட்டத்தை கண்காணித்தல் போன்றவை உரிய உபகரணங் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன. வேலைச் சூழல் சாதகமற்றதாகக் கண்டறியப்பட்டால், சிறந்த வேலைச் சூழல் மற்றும் உரிய செய்முறைகளைப் பேணுவதற்காக தேவைப்பட்ட தொழில்நுட்ப அறிவு பாதுகாப்பான சுகாதார செய்முறைகளைக் கைக்கொள்வதற்கான தேவை பற்றி கற்பிக்கின்றது.

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 206 சூழலியல் சேவைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைப் பேணுவதற்குரிய முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

#### 2.2.3.2 மருத்துவ பரிசோதனைகள்

வேலையாள் தனது பணியை ஆற்றுவதற்கு சிறந்த ஆரோக்கியத்துடன் உள்ளாரா என்பதை தீர்மானிப்பதற்கு சுகாதார நிலையை மதிப்பிடுவதற்காக மருத்துவ பரிசோதனை நடத்தப்படுகின்றது. கேட்டல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, பணியாற்றுவதற்கான உடற்றகுதி, நுரையீரல் தொழிற்பாடு மற்றும் பார்வை பரிசோதனை போன்றவை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டுள்ளன. சூழலியல் கண்காணிப்பு வேலையாளர்களின் நோய்களை இனங்காண்பதற்கு மற்றும் வேலையாள் தனது பணியை ஆற்றுவதற்கான உடற்றகுதியைக் கொண்டுள்ளாரா என்று கண்டறிவதற்கு உதவுகின்றது. நோய்கள் எற்பட்டிருந்தால் தேவையான மருத்துவ ஆலோசனை வழங்கப்படுவதுடன், வேலையாளர் கிரமமான அடிப்படையில் கற்பிக்கப்படுகின்றார்.

இந்த சேவையின் தேவைக்காக நிறுவனங்களுக்கு விஜயம் மேற்கொள்வதன் மூலம் மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

#### 2.2.3.3 தீங்குகளை இனங்காணுதல் மற்றும் தே.தொ.பா.சு.நிறுவகத்தின் ஆலோசனை

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 679 மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டிருந்தன. உரிய நிறுவனங்களுக்கு விஜயத்தை மேற்கொண்டு தற்போதிருக்கின்ற தீங்குகள் இனங்காணப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, இதனைத் தெரியப்படுத்தியுள்ளதுடன் தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த சேவை 31 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

**2019.01.01 முதல் 2019.12.31 வரை தேசியதொழிற் கற்கைகள் நிறுவகத்தின் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதி, பௌதீக முன்னேற்றம்**

| | நடத்தப்பட்டபாடநெறிகள் | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | நிதிமுன்னேற்றம் (ரூபாமில்.) |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்புளோமா பாடநெறி | 02 | 50 | 10.03 |
| 02 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் பாடநெறி | 06 | 90 | 9.99 |
| 03 | நிருமணத் துறையினருக்கான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை | 02 | 20 | 0.38 |
| 04 | கழிவு முகாமைத்துவம் பற்றிய ஒரு நாள் பயிற்சிப் பட்டறை | 01 | 10 | 0.95 |
| 05 | கழிவு முகாமைத்துவம் பற்றிய 10 நாள் பயிற்சிப் பட்டறை | 01 | 10 | 0.49 |
| 06 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய இரண்டு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் - அபான்ஸ் லிமிடெட் | 01 | 10 | 0.73 |
| 07 | தாதியர்களுக்கான ஒருநாள் பயிற்சியமர்வு | 01 | 10 | 0.84 |
| 08 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி புடைவைத் துறைக்கு ஒரு நாள் பயிற்சியமர்வு | 01 | 15 | 0.98 |
| 09 | பாதுகாப்பற்ற, தீங்கிளைக்கும் வேலைத்தலங்கள் பற்றிய ஒரு நாள் பயிற்சியமர்வு | 01 | 15 | 1.47 |
| 10 | மேற்பார்வையாளர்களுக்கான ஒரு நாள் பாதுகாப்புப் பயிற்சிப் பட்டறை | 01 | 10 | 0.73 |
| 11 | மின்சார பாதுகாப்புப் பற்றி இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 10 | 1.90 |
| 12 | ஆசிரியர்களுக்கான தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் | 01 | 10 | 5.0 |

அட்டவணை 2.2.3.1 நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - 2019

#### 2.2.3.4 ஆய்வுகூடம் மற்றும் கட்டடங்களை நவீனமயப்படுத்துதல்

மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுகின்ற ஆய்வுகூடத்திற்கு உபகரணங்கள் இன்றி காணப்பட்ட நிலையில் 2019 ஆம் ஆண்டில் அது புதுப்பிக்கப்பட்டு நவீன வசதிகளுடன் உபகரணங்களிடப்பட்டன. ஆய்வாண்டு காலப்பகுதியில் நவீனரகத்துடன் கூடிய 90 இருக்கைகளைக் கொண்ட விரிவுரை மண்டபமொன்று நிருமாணிக்கப்படது. கட்டடத்தை நவீனமயப் படுத்தியமையானது, கற்கை நெறிகளைப் பயிலுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் தேவையான வசதியை அளிக்க முடிந்திருந்தது.

#### 2.2.3.5 தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா

இலங்கையில் பாதுகாப்பான வேலைத் தலங்களை உருவாக்குவதற்கு தேவைப்பட்டுள்ள சுகாதார, பாதுகாப்பு அலுவலர்களை உருவாக்குவதற்கான தேசிய பொறுப்பினை ஆற்றுவதற்கு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமாவினை நடத்துகின்றது. சுகாதார, பாதுகாப்பு அலுவலர்களுக்குத் தேவைப்பட்ட செய்முறை அறிவு வேலைத்தலங்களுக்கான விஜயங்களின்போது வழங்கப்படுகையில் கோட்பாட்டறிவினை விரிவுரைகளின் ஊடாக வழங்கப்படுகின்றது. டிப்புளோமா வழங்கப்படுவதற்கு முன்னர், அவர்களின் அறிவு மதிப்பீட்டு அறிக்கைகள், முன்னளிக்கைகள் மற்றும் பிரிசோதனைகளினூடாக பரிசோதிக்கப்படுகின்றது. இந்த கற்கை நெறி வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான தகைமைகளைக் கொண்டிருப்பதனால், இந்த பாடநெறியைப் பயின்று வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களில் சிலர் இன்று வெளிநாடுகளில் சேவையாற்றுகின்றனர்.

பாட நெறியைப் பூர்த்திசெய்த 16 மற்றும் 17 ஆம் தொகுதிகளில் சுமார் 135 மாணவர்களுக்கு 2019 ஒக்டோபர் 14 ஆம் திகதி சங்கிறில்லா ஹோட்டலில் டிப்புளோமா வழங்கும் வைபவத்தில் டிப்புளோமா வழங்கப்பட்டிருந்தது. தற்போது 18 மற்றும் 19 ஆம் தொகுதிகளுக்கான பாடநெறி நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

#### 2.2.3.6 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சிறப்பு விருது வைபவம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சிறப்பு விருது வைபவம், வேலைத்தலங்களில் விபத்துக்களையும், நோய்களையும் தடுப்பதற்கும் மற்றும் வேலைத்தலங்களில் விபத்துக்களால் ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கான பாதுகாப்பு தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ள நிறுவனங்களை இனங்கண்டு, கௌரவிப்பதற்காக மூன்றாவது வருடமாக தாமரைத் தடாகத்தில் ஓகஸ்ட் 22 ஆம் திகதி கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன், இந்த வைபவத்தில் 1500 தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களின் பங்குபற்றியிருந்தனர். விருது பெறுபவர்கள்,உரிய நிறுவனங்களுக்கு விஜயம் செய்து பெற்ற அவதானிப்புகளிலிருந்து நிபுணர்கள் குளாத்தினரால் தெரிவு செய்யப்பட்டவர்களாவர். இந்த விருதுகள், ஹோட்டல்கள், தொழிற்சாலைகள், ஆடைக் கைத்தொழில் மற்றும் பல் தேசிய கம்பனிகள் போன்ற அத்தகைய வேறுபட்ட துறைகளிலிருந்து சிறிய, நடுத்தர மற்றும் பெரியளவு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.




படம் 2.2.3.1 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சிறப்பு விருது வழங்கல் வைபவம்

# 2.2.4

## வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

வேலைத்தலத்தில் ஏற்படுகின்ற விபத்துக்களுக்காக பணியாளர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்காக 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம் 2005 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டது. வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிவானின் தத்துவம் மற்றும் நீதிவான் நீதிமன்றத் தத்துவத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கக்கூடியவகையில் 14 சுற்று நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படுகின்ற நீதித்துறை அலுவலர்களான வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர், மேலதிக வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர்கள் மற்றும் பிரதி ஆணையாளர்கள், நட்டஈட்டு ஆணையாளர்கள் ஆகிய 3 பதவிகளும் இலங்கையின் கணக்காளர் சேவையின் தரம் I இனைச் சேர்ந்த பதவி ஒன்றும் இலங்கை நிருவாக சேவையின் பதவியொன்றும் உள்ளடங்கலாக 43 பதவிகள் இதில் காணப்படுகின்றன.

இந்த அலுவலகம் வழக்குகள் பிரிவு, தாபனப் பிரிவு, கணக்குகள் பிரிவு, சிறிய வயதினர் நட்டஈட்டு அலுவல்கள் மற்றும் காப்புறுதி உரிமப்பத்திரப் பிரிவு போன்றவற்றை உள்ளடக்கி உள்ளது. வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்ற செயல்முறைக்கு குற்றவியல் வழக்குக் கோவை, சிவில் வழக்குக் கோவை மற்றும் சாட்சிய கட்டளைச் சட்டம் ஏற்புடையதானவை என்பதுடன், மேன்முறையீட்டு நடவடிக்கை முறையானது மாவட்ட நீதிமன்றத்திற்கு சமமானதாகும்.

இந்த அலுவலகத்தின் பிரதான குறிக்கோள், வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் இடம்பெறுகின்ற விபத்துக்களில் காயமடைகின்ற வேலையாளர்களுக்கு, தொழிலின் தன்மைக்கு அமைய ஏற்படக்கூடிய நோய்களினால் பாதிக்கப்படுகின்ற வேலையாளர்களுக்கும் மற்றும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் இடம்பெறுகின்ற விபத்துக்களினால் உயிரிழக் கின்ற வேலையாளர்களில் தங்கிவாழ்வோருக்கும் நட்டஈட்டைப் பெற்றுக்கொடுத்தலாகும்.

### தொலைநோக்கு

காயம் அல்லது மரணம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் பணியாளர்களுக்கு விரைவாக நட்டஈட்டினைச் செலுத்தும் வகையில் தொழில்தருநர்களை ஆக்கி பணியாளருக்கு திருப்தியை உருவாக்குதல்.

### செயற்பணி

பணிபுரிகையில் காயம், மரணம் அல்லது நோய் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் வேலையாளர்களுக்கு அல்லது தங்கியிருப்பவர்களுக்கு விதித்துரைக்கப்பட்ட நட்டஈட்டினைச் செலுத்துவதற்கு நீதிமன்ற நடவடிக்கைமுறைகளை ஆரம்பித்தல் மற்றும் தொழில்தருநர்களை மேற்கொள்ளச் செய்வதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

**1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளரிடம் உரித்தளிக்கப்பட்டுள்ள பிரதான தத்துவங்கள் மற்றும் கடமைகள்.**

1. அரச துறை மற்றும் தனியார் துறையில் தொழில் புரிகையில் ஏற்படுகின்ற விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களுக்காக தொழில்தருநர்களிடமிருந்து நட்டஈட்டினை அறவிடுவதுடன் தொடர்புட்ட செயற்பாடுகள் மற்றும் வேலை யாளரொருவரின் இறப்பின்போது அவரில் தங்கியிருப்பவர். (இறுதித் திருத்தத்தின்படி, செலுத்தக்கூடிய ஆகக்கூடிய நட்டஈடு 550,000/- ஆகும்)

2. இறந்த பணியாளர்களில் தங்கியிருக்கின்ற பராயமடையாதவர்களது நட்டஈட்டை அவர்கள் முதிர்ச்சியடையும் வரையில் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பிலிட்டு அதனைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.

3. நட்டஈட்டுக் கொடுப்பனவை தெழில்தருநர்கள் செலுத்தாத சந்தர்ப்பங்களில், அத்தகைய தொழில் தருநர்களது அசையும், அசையாத சொத்துக்களைக் கைப்பற்றி, நட்டஈட்டினை அறவிடுவதற்காக அவற்றை பொது ஏலத்தில் விடுதல்.

4. வேலையாளர் நட்டஈட்டுக் காப்புறுதி அனுமதிப் பத்திரத்தை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் இரத்துச் செய்தல்.

5. பணியாளரொருவருக்கு விபத்தொன்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் பரிசோதனைகளை நடத்துதல்.

6. இலங்கையில் பதிவுசெய்து கப்பலில் மற்றும் விமானத்தில் பணியாற்றுகின்ற வேலையாளர்களுக்கு இலங்கைக்கு வெளியே விபத்துக்கள் ஏற்படுகின்றவிடத்து நட்டஈடு அறவிடுவதனை மேற்கொள்ளுதல்.



படம் 2.2.4.1 தொழில்சார் ஊறுகளுக்கு நட்டஈடு வழங்குதல்

**2019.01.01 முதல் 2019.12.31 வரையான முன்னேற்றம் (நீதிமன்றங்கள் தொடர்பான விடயங்கள்)**

| தொழிற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|
| தொழில்தருநர்களினால் முறையாக அறிக்கை செய்யப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை | 468 |
| விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2712 |
| இறுதிக் கட்டச் செயற்பாடுகளுக்கான நட்டஈட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 464 |
| பதிவுசெய்யப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | 100 |
| உயிராபத்தை ஏற்படுத்தும் விபத்துக்களுக்கெதிராக நட்டஈடாக அறவிடப்பட்ட தொகை (ரூபா. மில்.) | 231.33 |
| நீதிமன்றங்களின் ஆணைப்படி அல்லது தன்னார்வ அடிப்படையில் உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களுக்காக தொழில் தருநர்களினால் வேலையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொகை (ரூபா.மில்) | 46.17 |
| பதிவுசெய்யப்பட்ட உடன்படிக்கைகளின்படி இறப்பை ஏற்படுத்தாத விபத்துக்கள் காரணமாக பணியாளர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை (ரூபா. மில்) | 12.62 |
| உயிராபத்தை விளைவிக்கும் விபத்துக்கள் தொடர்பில் அறிவிடப்பட்டதன் பின்னர் பராயமடையாத தங்கியிருப்போர் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணத் தொகை (ரூபா. மில்) | 33.83 |
| பராயமடையாதோர் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 168 |
| பராயமடையாதோர் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகள் அவர்கள் 18 வயதினை அடைந்ததும் மூடப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 135 |
| செலுத்தப்பட்ட மொத்தத் தொகை (ரூபா.மில்) | 16.38 |

அட்டவணை 2.2.4.1 – நீதிமன்ற விடயங்கள் பற்றிய முன்னேற்றம் - 2019

**2.2.4.2. 2019.01.01 இலிருந்து 2019.12.31 வரையான நிதிசார் முன்னேற்றங்கள்**

| விபரம் | 2019ஆம் ஆண்டின் ஏற்பாடு (ரூபா) | 2019 ஜனவரி 01 – திசெம்பர் 31 வரையான செலவினம் (ரூபா) | மீதி (ரூபா மில்லியன்) | செலவின் விகிதம் |
|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 39,180,000 | 32,934,912.33 | 6,245,087.67 | 84.06 % |
| மூலதனச் செலவினம் | 520,000 | 373,337.34 | 146,662.66 | 71.80 % |
| மொத்தச் செலவினம் | 39,700,000 | 33,308,249.67 | 6,391,750.33 | 83.90% |

அட்டவணை 2.2.4.2 – நிதிசார் முன்னேற்றங்கள் - 2019

## 2.2.5

# தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 2007 செத்தெம்பர் 11 ஆம் திகதி அலுவலக ரீதியாகத் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் 06 ஆம் திகதி 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் பாராளுமன்றத்தினால் சட்டரீதியாக ஒன்றிணைக்கப்பட்டது. இந்நிறுவகம், தொழில்தருநர்கள், தொழில்தருநர்கள் மற்றும் அரச ஊழியர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தொழிற் சங்கங்களைக் கொண்டிருக்கின்ற ஆளுநர்கள் சபை-யொன்றினால் நிருவகிக்கப்படுகின்றது.

தொழில் சட்டவாக்கங்கள், ஒழுங்குவிதிகள் பற்றியும் அதேபோன்று பல்வேறு முகாமைத்துவ விடயப்பரப்புகள் தொடர்பிலும் அறிவைப் பெற்றுள்ள திறன்மிக்க பலம்வாய்ந்த ஊழியர் அணியொன்றை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் வழிநடத்துதல் போன்றவை இந்தநிறுவகத்தின் பிரதானதொழிற்பாடுகளாகும்.

### தொலைநகல்

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கான தொழிற்றுறை அமைதி மற்றும் ஐக்கியம்.

### செயற்பணி

கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சியினூடாக ஆக்கமுள்ள தொழில் உறவுகளை விருத்தி செய்வதற்கும் பேணுவதற்கும் முத்தரப்புகளுக்கும் உதவுதல்.

இந்த செயற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில், பின்வருகின்ற பிரதான பிரிவுகள் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தில் தொழிற்படுகின்றன

i) பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
ii) ஆராய்ச்சி, திட்டமிடல் மற்றும் வெளியீட்டுப் பிரிவு
iii) நிருவாகம் மற்றும் நிதிப் பிரிவு

#### 2.2.5.1 நிறுவனக் கட்டமைப்பு

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தவிசாளர் உள்ளடங்கலாக 19 பணிப்பாளர்கள் சபையால் நிருவகிக்கப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் பணிப்பாளர்அதிபதி, மூன்று இடைநிலை மட்ட முகாமையாளர்கள், ஐந்து கனிஷ்ட முகாமையாளர்கள் மற்றும் துணை சேவைகளிலுள்ள பதவியினருடன் 21 உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றது.

#### 2.2.5.2 புதியவளகத்தில் அமைதல்

பத்திரமுல்லை பெலிவத்தை பன்னிப்பிட்டி வீதியிலிருந்த எமது நிறுவனம், 2019.11.11 ஆம் திகதியிலிருந்து தொழில் செயலகத்தின் 2 ஆவது தளத்திற்கு மாறியிருந்ததுடன், தற்போது, முத்தரப்பு அக்கறைதாரர்களுக்கும் வசதிகளை வழங்குகைளில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சியினூடாக ஆக்கத்திறனுள்ள தொழில் உறவினைப் பேணுகின்ற உயர் அணுகுமுறையுடன் தொழிற்படுகின்றது.

#### 2.2.5.3 2019-01-01 இலிருந்து 2019-12-31 வரை நடத்தப்பட்ட முன்னேற்றத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

| நிகழ்ச்சித் திட்டங்களின் விபரம் | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | எதிர்பார்த்த வருமானம் (ரூபா.மில்.) | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பெற்ற வருமானம் (ரூபா.மில்) |
|---|---|---|---|---|
| டிப்ளோமா பாடநெறி | 3 | 3 | 1.2 | 0.78 |
| சான்றிதழ் பாடநெறி | 15 | 11 | 4.8 | 2.8 |
| Tailor made | 24 | 23 | 2.4 | 3.9 |
| எட்டு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 4 | 1 | 1.8 | 0.5 |
| நான்கு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 4 | 1 | 1 | 0.4 |

| நிகழ்ச்சித் திட்டங்களின் விபரம் | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | எதிர்பார்த்த வருமானம் (ரூபா.மில்.) | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பெற்ற வருமானம் (ரூபா.மில்) |
|---|---|---|---|---|
| மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டம் | 8 | 8 | 1.6 | 1.4 |
| இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 14 | 16 | 2.1 | 2.2 |
| ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 30 | 29 | 2.2 | 1.9 |
| பயிற்சியமர்வுகள் | 11 | 10 | 4.7 | 2.7 |
| பரீட்சைகளை நடத்துதல் | 2000 | 2265 | 6 | 6.1 |
| வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் | 35 (பரீட்சார்த்திகள்) | 13 | 9.6 | 3.0 |

அட்டவணை 2.2.5.1 – நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - 2019



படம் 2.2.5.1 சான்றிதழ்கள் வழங்குதல்

# 2.2.6

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

இலங்கையில் இரண்டாவது பாரிய சமூகப் பாதுகாப்பு நிதியமான ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியச் சபை, 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியச் சட்ட ஏற்பாட்டின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருந்ததுடன், 1981 மார்ச் 01 ஆம் திகதி செயற்பாட்டிற்கு வந்திருந்தது. இந்த நிதியமானது, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் நிருவகிக்கப்படுவதுடன், தற்போது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்றது.

இந்நிதியத்தின் உறுப்பினர்களாக வருவது தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறையிலுள்ள பணியாளர்களுக்கு கட்டாயமானதாகும். சட்ட எற்பாட்டு நியதிகளின்படி, தொழில்தருநர், பணியாளரது மொத்த உழைப்பின் மூன்று வீதத்திற்குச் சமமான தொகையொன்றினை மாதாந்தம் பணியாளர் தொடர்பில் செலுத்துவதற்கு பொறுப்புவாய்ந்தவராவார். மேலும், சுயதொழில் செய்வோர் மற்றும் குடிபெயர் வேலையாளர்கள் நிதியத்தின் தன்னார்வ உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்நிதியம், பணியாளர்களின் சுகாதாரம், வீடமைப்பு மற்றும் அவர்களது பிள்ளைகளின் கல்வித் தேவைகளுக்குமாக 10 நன்மைபயக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

2019 டிசெம்பர் 31 இல், உறுப்பினர்களின் கணக்கு மீதி 339 மில்லியனாக காணப்படுவதுடன், உறுப்புரிமைக் கணக்குகளின் எண்ணிக்கை 14.6 மில்லியனாகும். அதில், 2.6 மில்லியன் தற்போது உறுப்புரிமை உதவுதொகைகளைச் செலுத்திக் கொண்டிருக்கின்ற செயலுறுவகைப்பாட்டின் கீழ் வருகின்றனர். 2019 டிசெம்பர் 31 இல், உறுப்பினர்களின் உதவுதொகையின் பெறுமதி 27.4 பில்லியன் ரூபா என்பதுடன் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட நன்மைகளின் பெறுமதி 25.9 பில்லியன் ரூபாவாகும்.

2019 டிசெம்பர் 31 இல், சபையின் மொத்தச் சொத்து 343 பில்லியன் ரூபா என்பதுடன், ஆய்வாண்டு காலப்பகுதியில் 32.4 பில்லியன் ரூபா வருவாயும் 25.9 பில்லியன் ரூபா இலாபமும் உழைக்கப்பட்டுள்ளது.

### தொலைநகல்

நிறுவனம்சார் சிறப்பியல்பினூடாக அனைத்து அக்கறைதாரர்களுக்கும் மிகவும் ஆற்றல்மிக்க, சாத்தியமிகு முதன்மையான நம்பிக்கையாக விளங்குதல்.

### செயற்பணி

பரந்தளவிலான நிதிசார் நன்மைகளையும், சிறந்த வாடிக்கையாளர் சேவைகளையும் பரந்தளவில் வழங்கி மிகவும் அக்கறையுள்ளதும், விவேகமானதுமான நம்பிக்கையாக விளங்குதல்.

#### 2.2.6.1 நிதியத்தின் குறிக்கோள்கள்

- நிதியிடல் மற்றும் முதலீடு ஆகியவற்றில் பங்குபற்றுவதனூடாக பணியாளரின் உரிமைத்துவம், நலன்புரி மற்றும் பொருளாதார உரிமையை மேம்படுத்துதல்;
- தொழில்முயற்சிகளில் பங்குவட்டியைப் பெறுவதனூடாக முகாமைத்துவத்தில் பணியாளர் பங்குபற்றுவதனை ஊக்குவித்தல்;
- ஓய்வூதியத்தின்போது பணியாளருக்கு பங்களிப்பு அல்லாத அனுகூலத்தை வழங்குதல்.

### 2.2.6.2 நாடு முழுவதும் அமைந்துள்ள 19 பிராந்தியஅலுவலகங்கள்

1. கொழும்பு மாவட்ட அலுவலகம்
2. கொழும்பு 01-07
3. கொழும்பு 08 -15
4. கண்டி
5. கம்பஹா
6. மாத்தறை
7. காலி
8. அம்பாந்தோட்டை
9. களுத்துறை
10. இரத்தினபுரி
11. கேகாலை
12. குருனாகல்
13. அனுராதபுரம்
14. பதுளை
15. யாழ்ப்பாணம்
16. அம்பாறை
17. வவுனியா (புதிய பிராந்திய அலவலகம்)
18. நுவரெலியா (புதிய பிராந்திய அலவலகம்)
19. திருகோணமலை (புதிய பிராந்திய அலவலகம்)

### 2.2.6.3 சபையின் முன்னேற்றம்

| | 31.12.2019 (ரூபா. மில்.) | | வேறுபாடு% |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டது | உண்மையானது | திட்டமிடப்பட்டது |
| உறுப்பினர்களின் நிதியம் | 306,455 | 338,614 | 10.5% |
| மொத்தச் சொத்துக்கள் | 310,771 | 343,392 | 10.5% |
| வருடாந்த வருமானம் | 28,803 | 32,370 | 12.4% |
| தேறிய இலாபம் | 23,285 | 25,915 | 11.1% |
| அரசாங்கத்திற்குச் செலுத்திய வரிகளின் தொகை | 3,395 | 4,219 | 24.3% |

அட்டவணை 2.2.6.1 - ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றம்

### 2.2.6.4 2019 டிசெம்பர் 31 இலுள்ளவாறு உண்மையான தொகைகளுக்கு எதிராக வரவுசெலவு திட்டமிடப்பட்டுள்ள தொகை

| செயற்பாடு | திட்டமிடப்பட்ட தொகை | உண்மையான தொகை | வேறுபாட்டு |
|---|---|---|---|
| உதவுதொகைகளின் சேகரிப்பு (ரூபா.மில்.) | 28,058 | 27,395 | (2.36) |
| அறவீடுகள் (ரூபா.மில்.) | 300 | 319 | 6.33 |
| இணைய வங்கி முறைமையினூடாக உதவுதொகைகளைச் செலுத்துகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை | - | 5,628 | N/A |

அட்டவணை 2.2.6.2 - உண்மையான தொகைக்கு எதிராக திட்டமிடப்பட்ட தொகைகள் - 2019

## 2.2.6.5 நன்மைகள் திட்டங்கள்

- **சுகாதாரநன்மைகள்**

i. நிரந்தர இயலாமைக்கான நன்மைகள் திட்டம் - ரூபா. 200,000

ii. இருதய சத்திர சிகிச்சைக்கான நிதி மானியம் - ரூபா. 300,000

iii. சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கான நிதி மானியம் - ரூபா. 300,000

iv. கண் வில்லை மாற்றீட்டுசத்திரசிகிச்சை - ரூபா. 30,000

v. ‘சிரமசுவ’ மருத்துவமனைக் காப்புறுதித் திட்டம் - ரூபா. 50,000

vi. இறப்பு நலன் திட்டம் - ரூபா. 100,000

**கல்விசார் நன்மைகள்**

01. ஊ.ந.பொ. நிதிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு தரம் 5 புலமைப்பரிசில் ஒவ்வொருவருக்கும் தலா 15,000 ரூபா பெறுமதியான 9000 புலமைப்பரிசில்கள்

02. தரம் 5 புலமைப்பரிசிலில் சித்தியடைந்த நிரந்தரமாக அங்கவீனமுற்ற உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குதல்.

03. உறுப்பினர்களின் க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 12,000 ரூபா வீதம் 5,000 பிள்ளைகளுக்கு வருடாந்த நிதி உதவி வழங்குதல்.

**வீடமைப்பு நன்மைகள்**

01. “வியன” குறைந்த வட்டி கடன் திட்டம்.

வரவுசெலவுத்திட்டத்துடன் ஒப்பிடுமிடத்து 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான தரவு

**2.2.6.6 உதவு தொகைகளின் மீள் கொடுப்பனவுகள் ரூபா.மில்லியன்**

| மீள்கொடுப்பனவு | திட்டமிடப்பட்டது | உண்மையானது | வேறுபாடு |
|---|---|---|---|
| உதவுதொகைகளின் மீள்கொடுப்பனவு | 21,206 | 20,314 | 892 |
| உறுப்பினர்களுக்கான நன்மைகள் | 605 | 503 | 102 |
| **மொத்தம்** | 21,811 | 20,817 | 994 |

அட்டவணை 2.2.6.3 உதவுதொகைகளை மீளச்செலுத்துதல்

**நன்மைகள் கொடுப்பனவு**

**ரூபா.மில்லியன்**

| நன்மைகளின் வகைப்பாடுகள் | திட்டமிடப்பட்டது | உண்மையானது | வேறுபாடு |
|---|---|---|---|
| இறப்புக்கான நன்மைகள் | 120 | 102 | 18 |
| நிரந்தர இயலாமை | 14 | 10 | 4 |
| இருதய சத்திரசிகிச்சை | 216 | 175 | 41 |
| சிறுநீரகமாற்றுகைகள் | 8 | 6 | 2 |
| கண் வில்லை மாற்றீட்டு சத்திர சிகிச்சை | 7 | 4 | 3 |
| தரம் 5 புலமைப்பரிசில்கள் | 135 | 135 | - |
| உயர் தர புலமைப்பரிசில்கள் | 60 | 60 | - |
| ‘சிரமசுவ’ திட்டம் | 45 | 10 | 35 |
| **மொத்தம்** | **605** | **502** | **103** |
| ‘வியன’ வீடமைப்புத் திட்டம் | 1004 | 955 | 49 |

அட்டவணை 2.2.6.4 அனுகூலக் கொடுப்பனவுகள்




படம் 2.2.6.1 தேசிய உற்பத்தித்திறன் விருது வைபவத்தில் வவுனிய பிராந்திய அலுவலகம் சேவைத்துறையின் கீழ் 3 ஆவது இடத்தைப் பெற்றமை

**சபையின் முதலீடுகள் இரண்டு வகைப்படும்.**

**அரசாங்கம் நிலையான வருமான சாதனங்களைப் பெற்றுள்ளது.**

- திறைசேரி பிணைமுறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள்
- நிலையான வைப்புக்கள்
- தேசிய அபிவிருத்தி வங்கியின் 'வியன' வைப்புக்கள்

**பங்குகளின் முதலீடுகள்**

- பட்டியலிடப்பட்ட பங்குகள்
- தொகுதிக் கடன்கள் மற்றும் அலகு நம்பிக்கைப் பொறுப்புகள்

### 2.2.6.7 2019 டிசெம்பர் 31 இலுள்ளவாறு முதலீட்டுப் பிரிவு (ரூபா.மில்.)

| முதலீட்டின் வகை | பெறுமதி | ஆதனம் % |
|---|---|---|
| திறைசேரிபிணைமுறிகள் (7.43% முதல் 14.38%) | 248,725 | 77.9% |
| நிலையான வைப்புகள் சாதாரண சேமிப்புகள் | 51,369 | 16.1% |
| தொகுதிக் கடன்கள் | 4,990 | 1.6% |
| பிணைமுறிகள் (கரவலப்பிட்டி – 9,7%) | 1,586 | 0.5% |
| தேறிய பெறுமதி மீதான பங்குகள் | 11,335 | 3.5% |
| அலகு நம்பிக்கைப் பொறுப்புகள் மீதான பங்குகள் | 191 | 0.1% |
| ஏனைய முதலீடுகள் (வியண வீடமைப்புத் திட்டம்) | 954 | 0.3% |
| **மொத்தம்** | **319,150** | 100% |

அட்டவணை 2.2.6.5 – 2019 திசெம்பர் 31 இலுள்ளவாறு முதலீட்டு விடயவிதானம்

### 2.2.6.8 லங்கா உப்புக் கம்பனியில் முதலீடு

இலங்கை உப்புக் கம்பனியின் 90%ஆன சாதாரண பங்குகளின் உரிமைத்துவம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் 452 மில்லியன் ரூபாவுக்கு 1997.01.24 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கொள்வனவு நிதி அமைச்சுக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்குமிடையிலான கொள்வனவு மற்றும் விற்பனை உடன்படிக்கைகளினூடாக பரிமாற்றப்பட்டிருந்தது.

### 2.2.6.9 2019 ஓகஸ்ட் 31 இலுள்ளவாறு முக்கியமான நிதித் தரவுகள்

(ரூபா.மில்.)

| | திட்டமிடப்பட்டது | உண்மையானது | வேறுபாடு |
|---|---|---|---|
| முதலீட்டு வருமானம் | 30,457 | 31,998 | 154 |
| ஏனைய வருமானம | 365 | 372 | 7 |
| பதவியினர் செலவீனம் | 1,271 | 1,258 | 13 |
| தொழிற்பாட்டுச் செலவீனம் | 297 | 231 | 66 |
| உறுப்பினர்கள் செலவீனம் | 969 | 747 | 222 |
| வருவாய் வரிச் செலவீனம் | 3,960 | 4,219 | 259 |
| **தேறிய இலாபம்** | 24,325 | 25,915 | 1,590 |

அட்டவணை 2.2.6.6 2019 ஓகஸ்ட் 31 இல் உள்ளவாறான முக்கிய நிதித் தரவு

### 2.2.6.10 முக்கிய செயலாற்றுகைச் சுட்டிகள் - 2019 டிசெம்பர் 31 இலுள்ளவாறு

| | டிசெம்பர் 2018 | டிசெம்பர் 2019 |
|---|---|---|
| முதலீடுகள் மீதான இலாபம் | 10.25 | 10.45 |
| மொத்த நலன்கள் (ஏனைய வருமானம் | 10.41 | 10.57 |
| தொழிற்பாட்டுச் செலவீனம் | 0.49 | 0.49 |
| உறுப்பினர்கள் செலவீனம் | 0.26 | 0.29 |
| மொத்தச் செலவீனம் | 0.75 | 0.73 |
| முதலீட்டு வீதம் மீதான தேறிய இலாபம் | 9.02 | 9.07 |

அட்டவணை 2.2.6.7. முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள் - 2019

### 2.2.6.11 குறுகியகாலத் திட்டங்கள் -2018

- உதவுதொகைகளின் சேகரிப்பினை அதிகரித்தல் 12%
- முதலீட்டு வருமானத்தை அதிகரித்தல் 10%
- உறுப்பினர்களின் நிதியத்தை அதிகரித்தல் 12%




படம் 2.2.6.2 இலங்கை அரச நிதிக் கணக்குகள் மன்றத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட சிறந்த ஆண்டறிக்கை விருதுப் போட்டி - 2019 இல் இரண்டு தங்க விருதுகளைப் பெற்ற நிகழ்வு

(ஆ) **2019.01.01 இலிருந்து 2019.12.31 வரை நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

- தகவல் முறைமை விண்ணப்பத்தை (EISA) அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உதவு தொகைகளைச் சேகரிப்பதனைச் செம்மைப்படுத்துவதற்காக பரிசோதனைத் துறையினை விரைவுபடுத்தும் நோக்கில் சர்வதேச தொழில் தாபனத்தின் ஒத்துழைப்புடன், நிதி மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் நிதி உதவியுடனான ஊ.ந.பொ. நிதி தகவல் முறைமை விண்ணப்பமாகும் (EISA கருத்திட்டம்).

- இணையத்தினூடாக தொழில் தருநர்களினால் உதவுதொகைக் கொடுப்பனவினை இலகுபடுத்துவதற்கும் உதவுதொகைகள் பற்றிய அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும் தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மனிதவளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்துதலும் நடைமுறைப்படுத்துதலும்.

- அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பரந்த சேவையினை வழங்கும் குறிக்கோளுடன் பிராந்திய அலுவலகங்களைத் தாபிப்பதற்கு கம்பஹா, வவுனியா மற்றும் அம்பாந்தோட்டையிலிருந்து காணிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- உள்ளகக் கணக்காய்வினை மீளமைத்தலும் சபைக்கு இடர்முகாமைத்துவ செயன்முறையை அறிமுகப்படுத்துதலும்.

- தேசிய அடையாள அட்டையினதும், ஊ.ந.பொ. நிதியத்திற்கான பிரத்தியோக இலக்கத்தினதும் அடிப்படையில் உறுப்பினர்களை மையப்படுத்திய முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு ஆட்பதிவுத் திணைக்களத்துடனும், தொழில் திணைக்களத்துடனும் ஒத்திசைவு உடன்படிக்கையொன்று ஒப்பமிடப்பட்டுள்ளது.

- தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் உதவியுடன் உற்பத்தித்திறன் எண்ணக்கருவினை அறிமுகப்படுத்துதலும் உற்பத்தித்திறன் கைந்நூலினைத் தயாரித்தலும்.

- மனிதவளங்களின் அபிவிருத்திக்காக அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதுடன், வெவ்வேறு மட்டத்திலுள்ள பணியாளர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களைச் செம்மைப்படுத்துவதற்கு பல்வேறு பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பாடநெறிகளை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், தொழிற்சங்க உறுப்பினர்கள் தமது உரியதுறைகளில் பயிற்சி எடுப்பதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வெளி வளங்கள் மற்றும் வெளிநாட்டு நன்கொடை முகவர்களின் ஒத்திசைவுடன் வெளிநாட்டுப் பயிற்சிவாய்ப்புகள் அலுவலர்களுக்கு வழங்கப்படுவதுடன், இதன்படி, சபையின் 46 அலுவலர்கள் வெளிநாட்டுப் பயிற்சிநிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்தனர்.

- தரம் 5 புலமைப்பரிசில் வைபவம் பதுளையில் 2019.08.30 ஆம் திகதி நடத்தப்பட்டது.

# 2.2.7

## சிரம வாசனா நிதியம்

சிரமவாசனா நிதியமானது, 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சபைச் சட்டத்தின் கீழ் பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துவதற்காக தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்றதொரு நிறுவனமாகத் தாபிக்கப்பட்டிருந்தது. சட்டத்தில் வரையப்பட்டுள்ள சபையின் 06 குறிக்கோள்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக எண்ணிக்கையிலான சேமநலன் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

"சிரம வாசனா நிதியத்தின்" நிதியின் பிரதான மூலம் தேசிய லொத்தர் சபையின் 'ஜாதிக்க சம்பத லொத்தர்' ஆகும். ஜாதிக்க சம்பத லொத்தர் விற்பனை அதிகரித்ததுடன், பணியாளர்களின் சேமநலனுக்காக விரிவான சேவை ஏற்பாட்டினை மேற்கொண்டு பரந்துபட்ட வளர்ச்சியொன்றிற்கான சாட்சியை நிதியம் கொண்டிருக்கின்றது.

### 2.2.7.1 சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்கள்

அ. வேலையாளர்களதும் அவர்களில் தங்கியிருப்போருக்குமான சேமநலனை மேம்படுத்துதல்.

ஆ. பணியாளர்களுக்கு முன்னறிவித்தல் வழங்கப்படாது வேலைத்தளங்கள் மூடப்படுகின்றபோது அவர்களுக்கு நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

இ. அவசரகாலத்தின்போது மருத்துவ வசதிகள் மற்றும் ஏனைய உதவிகளை பணியாளர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்கும் வழங்குதல்.

ஈ. பணியாளர்களுக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறுகின்றபோது பணியாளர்களுக்கு தற்காலிக நிவாரணங்களை வழங்குதல்.

உ. பணியாளர்களுக்கு அல்லது அவர்களில் தங்கியிருப்போருக்கு அனர்த்தத்தின்போது நிதி உதவிகள் மற்றும் ஏனைய வடிவிலான உதவிகளை வழங்குதல்.

ஊ. வேலையாளர்களின் சேமநலனுக்கு அதிகளவிலான பங்களிப்பினை நல்கியவர்களுக்கு விருதுகள் வழங்குதல்.

எ. பணியாளரின் தொழில் முடிவுறுத்தல் தொடர்பான நடவடிக்கைமுறை இருக்கின்றவிடத்து அல்து கைத்தொழில் பிணைக்கு ஏதேனும் எழுத்துவடிவிலான சட்ட ஏற்பாடுகளின் கீழ், தொழில் ஆணையாளர் அதிபதியின் முன், தொழில் நியாயாதிக்கசபையொன்றின் முன், நடுத்தீர்ப்பாளர் ஒருவர் முன் அல்லது கைத்தொழில் நீதிமன்றம் அல்லது வேறு சட்டமன்றங்களில் ஆரம்பிக்கப்படுகின்ற அல்லது நிலுவையாகவுள்ளவிடத்து பணியாளருக்கு சட்ட உதவியைப் பெறுவதற்கு நிதி நிவாரணம் வழங்குதல்.

### 2.2.7.2 நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| நிகழ்ச்சித்திட்டம் /செயற்பாடு | | 2019 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2019.01.01 – 2019.12.31 வரையான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி (ரூ.மில்.) | பௌதீகம் | நிதி(ரூ.மில்.) |
| 1 | மருத்துவகிளினிக் மற்றும் முகாம் | 14 | 10.3 | 18 | 9.4 |
| 2 | வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 7 | 5.15 | 14 | 4.7 |
| 3 | விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 28 | 0.84 | 29 | 0.50 |
| 4 | நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் | 6 | 11 | 14 | 9.2 |
| 5 | செயற்கை உறுப்புகளை வழங்குதல் | 35 | 1.05 | 2 | 0.04 |
| 6 | வாழ்க்கைத் தொழில் கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 12 | 0.36 | - | - |
| 7 | மருத்துவ நிவாரண நிகழ்ச்சித்திட்டம் | 30 | 1.3 | 10 | 0.5 |
| 8 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 32 | 0.96 | 32 | 0.56 |
| 9 | சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டம் | 55 | 1.1 | 21 | 0.24 |
| 10 | புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் | 100 | 7 | 102 | 6.4 |
| 11 | மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 20 | 0.5 | 1 | 0.4 |
| 12 | அறிவித்தல்களும் வெளியீடுகளும் | 4 | 1.2 | 8 | 0.47 |

அட்டவணை 2.2.7.1 நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்



படம் 2.2.7.1 மீகஹ கிவுல பிரதேசத்தில் நடத்தபட்ட கண் பரிசோதனை

## 2.3 சாதனைகள், சவால்கள் மற்றும் இலக்குகள்

1. இந்த அமைச்சின் காலத்துடன்கூடிய பொறுப்பாக தற்போதிருக்கின்ற தேசிய மற்றும் சர்வதேச சமூக பொருளாதார விடயத்துடன் இலங்கையில் முதலீட்டு நட்பு சூழலொன்றை உருவாக்குவதனை நோக்கி பணியாற்றகின்றது. தற்போதைய தொழில் உலகத்துடன் ஒத்தும் போகும் வகையில் தற்போதிருக்கின்ற சட்டவாக்கங்கள், ஒழுங்கு மற்றும் ஒழுங்குவிதிகளை மீளாய்கையில், இந்த அமைச்சு, உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளை நிலைநிறுத்துகின்றது. அதனை நோக்கி -

   i. பொருளாதாரத்தின் அக்கறைதாரர்களாக ஒட்டுமொத்த இலங்கை தொழில் அணியை ஆக்குவதற்கும், வெவ்வேறு சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்களிலுள்ள வேபாடுகள் மற்றும் முரண்பாடுகளை அகற்றுவதன் மூலம் சட்ட மூலங்களை இலகுபடுத்தி சேவை நிபந்தனைகளை கொண்டிருக்கின்ற தனித்த சட்டமொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

   ii. சிறுவர்களுக்கு கட்டாய கல்வி மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக தொழிலுக்கான ஆகக்குறைந்த வயதினை 14 வயதிலிருந்து 16 வயதாக திருத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

   iii. வேலைத்தல விபத்துக்களுக்காக வேலையாளுக்கு செலுத்த வேண்டிய நட்டஈடு 550,000 ரூபாவிலிருந்து 2 மில்லியனாக அதிகரிப்பதற்கு வேலையாளர் நட்டஈட்டு கட்டளைச்சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

   iv. மேலும் பரந்தளவில் தொழிற்சாலை பரிசோதனைகளை நடத்துவதற்காக தொழிற்சாலை கட்டளைச் சட்டத்திற்கு புதிய ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

   v. தற்போதைய தேவைப்பாடுகளுக்கு பொருந்துவதற்காக ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் திருத்தப்படுகின்றது.

   vi. பணியாளர்களுக்கான சேமநலச் செயற்பாடுகளை பரந்த விடயப்பில் மேற்கொள்வதற்காக சிரம வாசனா நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

   vii. பணியாளர்களுக்கு சிறந்த வேலைச்சூழலை உருவாக்குவதற்காக புதிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

   viii. வீட்டு வேலையாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பினை விரிவுபடுத்துவதற்காக தொழில் சட்வாக்கங்களால் வீட்டு வேலையாளர்கள் உள்ளடக்கப்படுவதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

   ix. பணியாளர்களின் ஆகக்குறைந்த சம்பளத்தை 2500/- ரூபாவினால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

2. சர்வதேச தொழில் தாபனத்தின் நூறாவது ஆண்டினைக் குறிக்கும் வைபவம் அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் 2019 ஏப்பிரல் மாதத்தில் இடம் பெற்றிருந்ததுடன், இதனையொட்டி விசேட தொழிற் செய்திமடலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன். முதலாவது நாள் தபாலுறை மற்றும் முத்திரையும் வெளியிடப்பட்டிருந்தன.

3. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகமை விருது தாமரைத்தடாகத்தில் கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் நடத்தப்பட்டிருந்தது. இந்த வைபவத்திற் செலவுறப்பட்ட தொகை 8.91 மில்லியனாகும்

4. நிறுவன மட்டத்திலான பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்திற்கு முழுமையாக உபகரணமிடப்பட்ட நடமாடும் ஆய்வுகூடமொன்று 4.3 மில்லியன் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிறுவகத்திற்கான வகுப்பறைகள் நவீன மாநாட்டு மண்டபமாக தரமுயர்த்துவதற்கு 17.29 ரூபா செலவுறப்பட்டிருந்தது.

5. தொழில் செயலகக் கட்டடத்தில் அமைச்சு அலுவலகம் பராமரிக்கப்பட்டிருந்தது. அனைத்து சமூக பாதுகாப்பு நிதியங்களையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவருவதற்காக, தொழில் திணைக்களம் “மெஹேவர பியஸ” என்ற பெயரில் 34 தளங்களைக் கொண்ட கட்டடமொன்று நிருமாணிக்கப்பட்டிருந்ததுடன், இந்த கட்டடத்தில் 6 ஆவது மற்றும் 7 ஆவது தளங்களுக்கு 2019 ஓகஸ்ட் மாதத்தில் அமைச்சு அலுவலகம் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

6. இச்செயற்பாடுகளை மேற்கொள்வதில், பல்வேறு சவால்கள் மற்றும் தடைகள் காணப்பட்டிருந்ததுடன், இது குறிப்பாக சட்ட முறைகளில் நிஜமாக இருந்தது. அனைத்து கொள்கை தீர்மனங்களும் எடுக்கப்பட்டு, சட்டவாக்கங்கள் தொழில்தருநர்கள், தொழிற் சங்கங்களைப் பிரதிநித்துவம் செய்கின்ற வேலையாளர்கள் மற்றும் அரச அலுவலர்கள் ஆகிய முத்தரப்பினரின் பங்கேற்புடன் திருத்தப்படுகின்றன. தொழில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் தலைமை வகிக்கப்படுகின்ற தேசிய தொழில் ஆலோசனை சபை இந்த நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டிருப்பதுடன், குறித்த சில பிரச்சினைகள் தொடர்பில் இணக்கப்பட்டை அடைவது சவாலானது. இதற்கு மேலும், கிடைக்கப்பெறுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட நிதி மற்றும் மனிதவளங்களைப் பயன்படுத்தி அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

7. திருத்தப்பட்ட சட்டங்களின் அட்டவணை திருத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. இத்திருத்தங்கள், வேலையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி சமூக சேமநலனை நிச்சயப்படுத்தி அதனால் தொழில் சட்டங்களின் நெகிழ்வுப்போக்கினை அதிகரிப்பதனை இலக்காக கொள்கின்றது.

8. தற்போதைய அரசாங்கத்தின் ''வளமான ஔிமயமான தொலைநோக்கு'' என்ற கொள்கைக் கூற்றினை 2020 ஆம் ஆண்டில் உண்மையாக்குவதனை நோக்கி பணியாற்றுவதனை மெற்கொள்ளவேண்டியிருக்கின்றது. கொள்கைக்கூற்றின் அத்தியாயம் 4 ''ஆக்கத்திறனுள்ள பிரஜை மற்றும் மகிழ்ச்சியான குடும்பம்'' வளமான நாடொன்றை உருவாக்குவதற்கான அடித்தளமாக மனித வளங்கள் இருக்கும் என்று தெரிவித்துள்ளது. ஆகையால், இந்த அமைச்சு, குறிப்பாக தனியார் துறை அபிவிருத்திக்கான செயற்பாட்டை ஆரம்பிக்கின்றது. தொழில் திணைக்களத்தின் ஊ.சே.நிதியப் பிரிவுக்கு புதிய பணியாளர்களின் தகவலை வழங்குவதற்கு தொழில்தருநர்களை கட்டாயமானதாக்குவதற்கு 2020 இல் ஊ.சே.நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உதவுதொகை வேலையாளரின் கணக்குக்கு வைப்பிலிடப்படுகின்ற போது கையடக்கத்தொலைபேசிக்கு குறுஞ்செய்தியினூடாக வேலையாளருக்கு அறிவிக்கப்படுகின்ற பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தவுள்ளது. தேசிய அடையாள அட்டையை ஊ.சே.நி இலக்கமாக பயன்படுத்துவதன் மூலம் தற்போதுள்ள பல பிரச்சினைகளை தீர்க்கமுடியும். ஆகவே, தேசிய அடையாள அட்டையை ஊ.சே.நி இலக்கமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் நிபந்தனைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் தொழில் நியதிகள் மற்றும் நிபந்தனைகளைச் செம்மைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வேலையாளர்களின் உரிமைகள் மற்றும் சமூக சேமநலனைப் பலப்படுத்துகையில் தற்போதிருக்கின்ற சிக்கலான தொழில் சட்டங்களை இலகுபடுத்தி ஒத்ததாக ஒழுங்குவிதி செயல்முறையை இலகுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

9. இலங்கையின் தற்போதைய தொழில் சந்தை சவால்களை வெற்றிகொள்வதற்கான பொறுப்பு இந்த அமைச்சிடமே காணப்படுகின்றது. நாட்டின் தொழில் சந்தையில் கட்டமைப்பு மாற்றங்களின் மூலம், பொருளாதார அபிவிருத்தியில் தொழில் அணியின் பங்களிப்பினை அதிகரிக்க முடியும் என்பதுடன், இந்த அமைச்சு இதனை நோக்கி பங்களிப்பு செய்யமுடியும். இதன்படி, 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொழில் அணிக் கணக்கெடுப்பின்படி, தொழில்வாய்ப்பின்மை விகிதம் ஆண்களிடையே 3.0 %, ஆகவும் பெண்களிடையே 7.1 % ஆக இருக்கையில் தொழில்வாய்ப்பின்மை வீகிதம் கீழ் மட்டத்தில் 4.4%, ஆகவும், தொழில் அணி பங்குபற்றுகை விகிதம் 51.8%. ஆக இருக்கின்றது. இதேபோன்று, தொழில்வாய்ப்பின்மையானது புதிதாக தொழில் சந்தைக்குள் நுழைகின்ற இளம் ஆட்களுக்கிடையில் அதிகளவுள்ளது (15 -24 வயது வகைப்பாட்டில் தொழில்வாய்ப்பு 21.4%). மேலும், க.பொ.த (உ.த) அல்லது உயர் தகைமைகள் உள்ள ஆட்களுக்கிடையில் தொழில்வாய்ப்பின்மை அதிகமாக 9.1% என்பதுடன் அதில், 13.2% பெண்களாவர். அதிக நெகிழ்வுப்போக்கான முறை மாற்று சேவையை அறிமுகப்படுத்தி குறித்தளவிற்கு பெண்களின் தொழில்வாய்பின்மையைக் குறைக்கமுடியும். மேலும், வேலை நேர நியமங்களுக்கு அப்பால் சர்வதேச தொழில் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றவர்களை உள்ளடக்கி தொழில் சட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் சேமநலனும் உத்தரவாதப்படுத்தப்படுதல் வேண்டும்.

10. நாட்டின் தொழில்வாய்ப்பில் முறைசாரா துறையின் பங்களிப்பு 58.7% என்பதுடன், அவை தற்போதிருக்கின்ற சட்டங்களால் உள்ளடக்கப்படவில்லை. இதன்விளைவாக, அவை தொடர்பில் சமூகப் பாதுகாப்பு முறைமை நடைமுறைப்படுத்தப்பட வில்லை. இது பிரச்சினைக்குரிய நிலைமைக்கு இட்டுச்செல்ல முடியும். வீட்டு வேலையாட்களை தொழில் சட்டவக்கத்திற்குள் உள்ளடக்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இதேபோன்றதொரு காப்பீட்டினை முறைசாரா துறையினருக்கு வழங்கி சில நிவாரணங்களை அவர்களுக்கு வழங்க முடியும். அதேநேரத்தில், ஏனைய கட்டமைப்புசார் பிரச்சினைகளும் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

11. குடிபெயர் வேலையாளர்களை ஒழுங்குபடுத்துவதற்கான தேவை தற்போது எழுந்துள்ளது. கணக்கெடுப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டவாறு, நாட்டிலுள்ள குடிபெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தேர்ச்சியுள்ள, ஏனைய வேலையாளர்களின் பற்றாக்குறை காரணமாக இது நிருமாணத்துறையில் தெளிவாக காணமுடிகின்றது. தற்போது அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கான பொறிமுறை எதுவுமில்லை. ஆகவே, அத்தகைய பொறிமுறை காலத்தின் தேவையாகும். ஆகவே, ஒழுங்குபடுத்தும் பொறிமுறையொன்று உரிய அனைத்து அக்கறைதாரர்களின் ஒருங்கிணைப்புடன் வகுத்தமைக்கப்படுதல் வேண்டும்.

12. சேவை வழங்குவதில் பாரம்பரிய முறைகளைக் கைவிட்டு சேவைநாடுநர்களுக்கு மிகவும் வினைத்திறன்மிக்க சேவை ஏற்பாட்டுக்காக நவீன டிஜிற்றல் முறைகள் கைக்கொள்ளப்படுதல் வேண்டும்.

13. ஊ.சே.நிதியச் செயற்பாடுகளுக்கு கணினி முறைகள் மேலும் பணிக்கிடப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏனைய சேவை-களையும் வழங்குவதற்கு அவை விரிவுபடுத்தப்படுதல் வேண்டும். உரிய செயற்பாடுகளுக்கு பொருத்தமான நவீன முறைகளை வடிவமைத்து சேவைநாடுநர்களின் காலதாமதத்தை குறைத்து அவர்களுக்கு அதிக வினைத்திறனுள்ள சேவையை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

டீ. எம். சரத் அபேகுணவர்தன
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு.
(அமைச்சரவை அந்தஸ்தற்றது)

# அத்தியாயம் மூன்று

# 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

**ACA -F**

ரூபா

| பாதீடு (2019) | | குறிப்பு | உண்மையானது 2019 | 2018 | |
|---|---|---|---|---|---|
| - | **வருவாய் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள், சேவைகள் மீதான வரி | 2 | - | - | ACA-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | |
| - | வருவாய் அல்லாதவையும் ஏனையவை | 4 | - | - | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | வருமானம் அல்லாத பெறுகைகள் | | - | - | |
| - | திறைசேரி கட்டுநிதிகள் | | 296,458,000 | 262,692,200 | ACA-3 |
| - | வைப்புகள் | | 247,750,937 | 174,688,271 | ACA-4 |
